18K3T3

பொதுத்தமிழ்

இரண்டாமாண்டு மூன்றாம்பருவம்

# செய்யுள் (காப்பியங்கள்) உரைநடை, அலுவல் முறை மடல்கள், தமிழ் இலக்கிய வரலாறு

## பகுதி—I தமிழ்

பருவம் III
LCI

18K3T3
கற்பித்தல்:6
தரப்புள்ளி:3

நோக்கம் : 1. காப்பிய இலக்கியச் சிறப்பினைப் பயிற்றுவித்தல்

2. அலுவலகக் கடிதங்களைத் திறம்பட எழுதப் பயிற்றுவித்தல்.

பயன்கள்: 1. தமிழ் இலக்கியங்களையும் பல்வேறு அறிஞர்களின் உரைநடைச் சிறப்புகளையும் அறிதல்.

2. ஆட்சிமொழிச் சொற்களைப் பயன்படுத்தவும், தமிழில் அலுவலகக் கடிதங்களை எழுதவும் கற்றுக் கொள்ளுதல்.

### அலகு—1

சிலப்பதிகாரம் - கானல் வரி காதை

மணிமேகலை - மலர்வனம் புக்க காதை

சீவகசிந்தாமணி - சுரமஞ்சரியார் இலம்பகம்

### அலகு—2

கம்பராமாயணம் - சுந்தரகாண்டம்- இலங்கை, எரியூட்டுப் படலம்.

பெரியபுராணம் - திருநாளைப் போவார் நாயனார் புராணம்.

பெருங்கதை - கரடு பெயர்த்தது

அலகு — 3

[illegible]

அலகு — 4

[illegible]

அலகு — 5

இலக்கிய வரலாறு [illegible]

[illegible]

பார்வை நூல்கள்

1. தமிழ் இலக்கிய வரலாறு [illegible]

2. நல்ல தமிழ் எழுத [illegible]

அலகு — 1

# சிலப்பதிகாரம்

தமிழ் மொழியில் தோன்றிய முதல் காப்பியம் சிலப்பதிகாரம். இந்நூல் இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது. கி.பி. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்நூல் மூன்று காண்டங்களையும், முப்பது காதைகளையும், 5001 வரிகளையும் உள்ளடக்கியது. புகார்க் காண்டம், 10 காதைகளையும், மதுரைக்காண்டம் 13 காதைகளையும், வஞ்சிக்காண்டம் 7 காதைகளையும் கொண்டது. இதன் பா வகை நிலை மண்டில ஆசிரியப்பா. அரும்பத உரையாசிரியர், அடியார்க்கு நல்லார் போன்றோரின் உரைகளைப் பெற்ற சிறப்பிற்குரியது. "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்று பாரதியாரால் சிறப்பிக்கப் பெற்றது. சிலப்பதிகாரம் மூன்று நிலைகளில் சிறப்பு பெற்று காணப்படுகிறது. அவை மூன்று உண்மைகளான அறம், பொருள், இன்பம் எனவும் சேர, சோழ, பாண்டிய நாடு என மூன்று நாடுகளையும் கோவலன், கண்ணகி, மாதவி என மூன்று கதைமாந்தர்களையும் மூன்று நகரங்களான புகார், மதுரை, வஞ்சி எனவும், முத்தமிழான இயல், இசை, நாடகம் எனவும், முதன்மை பெறும் சுவைகளுள் இன்பம், துன்பம், வீரம் போன்றனவும் மூன்று வேந்தர்களாக சேர, சோழன், பாண்டியன் எனும் நிலைகளில் சிறப்புடைய்தாக விளங்குகிறது. இந்நூலுக்கு முத்தமிழ்க் காப்பியம், முதன்மைக் காப்பியம், நாடகக் காப்பியம், பத்தினிக் காப்பியம், குடிமக்கள் காப்பியம், புதுமைக் காப்பியம், புரட்சிக் காப்பியம் உரையிடப்பட்ட பாட்டுடைச் செய்யுள் என்றெல்லாம் பல்வேறு பெயர்கள் வ்ழங்கப்படுகின்றன. இந்நூல் சமண சமயத்தைச் சார்ந்தது. இந்நூலில் "கானல்வரிக்காதை" நும் பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

## கானல் வரி காதை

### 1. கட்டுரை

சித்திரப் படத்துள் புக்கு செழுங் கோட்டின் மலர் புனைந்து
மைத்தடம் கண் மணமகளிர் கோலம்போல் வனப்பு எய்தி
பத்தரும் கோடும் ஆணியும் நரம்பும் என்று
இத்திறத்துக் குற்றம் நீங்கிய யாழ் கையில் தொழுதுவாங்கி
பண்ணல் பரிவட்டணை ஆராய்தல் தைவரல்
கண்ணிய செலவு விளையாட்டு கையூழ்
நண்ணிய குறும் போக்கு என்று நாட்டிய
எண் வகையால் இசை எழீஇப்
பண் வகையால் பரிவு தீர்ந்து
மரகத மணித்தாள் செறிந்த மணிக் காந்தள் மெல்விரல்கள்
பயிர் வண்டின் கிளைபோல பல்நரம்பின் மிசைப்படர
வார்தல் வடித்தல் உந்தல் உறழ்தல்
சீருடன் உருட்டல் தெருட்டல் அள்ளல்
ஏர் உடைப் பட்டடை என இசையோர் வகுத்த
எட்டு வகையின் இசைக் கரணத்துப்
பட்ட வகை தன் செவியின் ஓர்த்து
ஏவலன் பின் பாணி யாது என
கோவலன் கை யாழ் நீட்ட அவனும்
காவிரியை நோக்கினவும் கடற் கானல் வரிப்பாணியும்
மாதவி தன் மனம் மகிழ வாசித்தல் தொடங்கும்மன்

### நடந்தாய் வாழி காவேரி

திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோல் அது ஓச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங் கற்பென்று
அறிந்தேன் வாழி காவேரி



மன்னும் மாலை வெண்குடையான்
வளையாச் செங்கோல் அது ஒச்சி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி

கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மன்னும் மாதர் பெருங் கற்பு என்று
அறிந்தேன் வாழி காவேரி 3

விழவர் ஓதை, சிறந்து ஆர்ப்ப
நடந்தாய் வாழி காவேரி
விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப
நடந்த எல்லாம் வாய் காவா
மழவர் ஓதை வளவன் தன்
வளனே வாழி காவேரி. 4

### புகார் எம் ஊர்

கரிய மலர் நெடுங்கண் காரிகைமுன்
கடல் தெய்வம் காட்டிக் காட்டி
அரிய சூள் பொய்த்தார் அறன் இலர் என்று
ஏழையம் யாங்கு அறிகோம் ஐய
விரிகதிர் வெண் மதியும் மீன் கணமும்
ஆம் என்றே விளங்கும் வெள்ளைப்
புரிவளையும் முத்தும் கண்டு ஆம்பல்
பொதி அவிழ்க்கும் புகாரே எம் ஊர் 5

காதலர் ஆகி கழிக் கானல்
கையுறை கொண்டு எம்பின் வந்தார்
ஏதிலர் தாம் ஆகி யாம் இரப்ப
நிற்பதை யாங்கு அறிகோம் ஐய!
மாதரார் கண்ணும் மதி நிழல் நீர்
இணைகொண்டு மலர்ந்த நீலப்
போதும் அறியாது வண்டு ஊசலாடும்
புகாரே எம் ஊர் 6

மோது முது திரையால் மொத்துண்டு
போந்து அசைந்து முரல்வாய்ச் சங்கம்
மாதர் வரி மணல்மேல் வண்டல்
உழுது அழிப்ப மாழ்கி ஐய!
போதை பரிந்து அசைய மெல் விரலால்
கொண்டு ஓச்சம் குவளை மாலைப்
போது சிறங்கணிப்பப் போவார் கண்
போகாப் புகாரே எம் ஊர் 7

## கவலைக்கு மருந்து

துறை மேய் வலம்புரி தோய்ந்து மணல் உழுத
தோற்றம் மாய்வான்
பொறை மலி பூம் புன்னைப் பூ உதிர்ந்து நுண்தாது
போர்க்கும் கானல்
நிறை மதி வாள் முகத்து நேர் கயல்
கண் செய்த
உறை மலி உய்யா நோய் ஊர் கணங்கு
மென் முலையே தீர்கும் போலும் 8

## தெரியாமல் போனதே

நிணம் கொள் புலால் உணங்கல் நின்று புள்
ஓப்புதல் தலைக்கீடு ஆக
கணம் கொள் வண்டு ஆர்த்து உலாம் கன்னி
நறு ஞாழல் கையில் ஏந்தி
மணம் கமழ் பூங் கானல் மன்னி
மற்று ஆண்டு ஓர்
அணங்கு உறையும் என்பது அறியேன் அறிவேனேல்
அடையேன் மன்னோ 9

வலை வாழ்நர் சேரி வலை உணங்கும் முன்றில்
மலர் கை ஏந்தி
விலை மீன் உணங்கல் பொருட்டாக
வேண்டு உருவம் கொண்டு வேறு ஓர்
கொலை வேல் நெடுங் கண்
கொடுங் கூற்றம் வாழ்வது
அலை நீர்த் தண்கானல் அறியேன்; அறிவேனேல்
அடையேன் மன்னோ! 10

## பெண்ணா இவள்?

கயல் எழுதி வில் எழுதி கார் எழுதிக் காமன்
செயல் எழுதித் தீர்ந்த முகம் திங்களோ காணீர்
திங்களோ காணீர் திமில் வாழ்நர் சீறூர்க்கே
அம் கண் ஏர் வானத்து அரவு அஞ்சி வாழ்வதுவே 11

எறி வளைகள் ஆர்ப்ப இருமருங்கும் ஓடும்
கறை கெழு வேல் கண்ணொடு கடும் கூற்றம் காணீர்
கடும் கூற்றம் காணீர் கடல் வாழ்நர் சீறூர்க்கே
மடங்கெழு மென்சாயல் மகள் ஆயதுவே! 12

புலவு மீன் வெள் உணங்கல் புள் ஒப்பிக் கண்டார்க்கு
அலவ நோய் செய்யும் அணங்கு இதுவோ காணீர்
அணங்கு இதுவோ காணீர் அடும்பு அமர் தண்கானல்
பிணங்கு நேர் ஐம்பால் ஓர் பெண் கொண்டதுவே! 13

## துன்பம் தந்ததிவை

பொழில் தரு நறு மலரே புது மணம் விரிமணலே
பழுது அறு திரு மொழியே பணை இள வனமுலையே
முழு மதி புரை முகமே முரிபுரு வில்இணையே
எழுது அரும்மின் இடையே எனை இடர்செய்தவையே 14

திரைவிரி தருதுறையே திரு மணல் விரி இடமே
விரைவிரி நறு மலரே மிடைதரு பொழில் இடமே
மரு விரி புரி குழலே மதி புரை திரு முகமே
இரு கயல் இணை விழியே எனை இடர் செய்தவையே 15

வளை வளர் தரு துறையே மணம் விரி தருபொழிலே
தளை அவிழ் நறு மலரே தனியவள் திரி இடமே
முளை வளர் இள நகையே முழு மதி புரை முகமே
இளையவள் இணை முலையே எனை இடர்
செய்தவையே 16

## துவளும் துடி இடை

கடல் புக்கு உயிர் கொன்று வாழ்வர் நின் ஐயர்
உடல் புக்கு உயிர் கொன்று வாழ்வை மன் நீயும்
மிடல் புக்கு அடங்காத வெம் முலையோ பாரம்
இடர் புக்கு இடுகும் இடை இழவல் கண்டாய் 17

கொடுங் கண் வலையால் உயிர் கொள்வான் நுந்தை
நெடுங் கண் வலையால் உயிர் கொல்வை மன் நீயும்
வடம் கொள் முலையான் மழை மின்னுப் போல
நுடங்கி உகும் மென் நுசுப்பு இழவல் கண்டாய் 18

ஓடும் திமில் கொண்டு உயிர் கொள்வர் நின் ஐயர்
கோடும் புருவத்து உயிர் கொல்வை மன் நீயும்
பீடும் பிறர் எவ்வம் பாராய் முலை சுமந்து
வாடும் சிறு மென் மருங்கு இழவல் கண்டாய்! 19

### கண்களோ — காலனோ?

பவள உலக்கை கையால் பற்றி
தவள முத்தம் குறுவாள் செங்கண்
தவள முத்தம் குறுவாள் செங்கண் 20
குவளை அல்ல கொடிய கொடிய

புன்னை நீழல் புலவுத் திரைவாய்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண் 21
கொன்னே வெய்ய கூற்றம் கூற்றம்

கள்வாய் நீலம் கையின் ஏந்தி
புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண்
புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண் 22
வெள்வேல் அல்ல வெய்ய வெய்ய

சேரல் மட அன்னம் சேரல் நடை ஒவ்வாய்
சேரல் மட அன்னம் சேரல் நடை ஒவ்வாய்
ஊர் திரை நீர்வேல் உழக்கித் திரிவான் பின்
சேரல் மட அன்னம் சேரல் நடை ஒவ்வாய் 23

### கட்டுரை

ஆங்கு, கானல் வரிப் பாடல் கேட்ட மான் நெடுங்கண்
மாதவியும்
மன்னும் ஓர் குறிப்பு உண்டு இவன் தன் நிலை
மயங்கினான் என
கலவியால் மகிழ்ந்தாள் போல் புலவியால் யாழ் வாங்கி
தானும் ஓர் குறிப்பினள் போல் கானல் வரிப் பாடல் பாணி
நிலத் தெய்வம் வியப்பு எய்த நீள் நிலத்தோர் மனம் மகிழ
கலத்தொடு புணர்ந்து அமைத்த கண்டத்தால் பாடத்
தொடங்கும்மன் 24

### காவிரிப் பெண்ணே வாழ்க!

மருங்கு வண்டு சிறந்து ஆர்ப்ப
மணிப் பூ ஆடை அது போர்த்துக்
கருங் கயல் கண் விழித்து ஒல்கி
நடந்தாய் வாழி காவேரி
கருங்கயல் கண் விழித்து ஒல்கி
நடந்த எல்லாம் நின் கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன் வாழி காவேரி 25

பூவார் சோலை மயில் ஆலப்
புரிந்து குயில்கள் இசை பாடக்
காமர் மாலை அருகு அசைய
நடந்தாய் வாழி காவேரி
நாம வேலின் திறம் கண்டே
அறிந்தேன் வாழி காவேரி 26

வாழ் அவன் தன் வளநாடு
மகவாய் வளர்க்கும் தாய் ஆகி
ஊழி உய்க்கும் பேர் உதவி
ஒழியாய் வாழி காவேரி
ஊழி உய்க்கும் பேர் உதவி
ஒழியாது ஒழுகல் உயிர் ஓம்பும்
ஆழி ஆள் வான் பகல் வெய்யோன்
அருளே வாழி காவேரி 27

## புகார் எங்கள் ஊர்

தீங்கதிர் வாள் முகத்தாள் செவ்வாய் மணி முறுவல்
ஒவ்வா வேனும்
வாங்கும் நீர் முத்து என்று வைகலும் மால் மகன்
போல் வருதிர் ஐய
வீங்கு ஓதம் தந்து விளங்கு ஒளிய வெண் முத்தம்
விரை சூழ் கானல்
பூங்கோதை கொண்டு விலைஞர் போல் மீளும்
புகாரே எம் ஊர் 28

## ஆம்பல் மலரும் அழகு நகர்

மறையின் மணந்தாரை வன் பரதர் பாக்கத்து
மடவார் செங்கை
இறை வளைகள் தூற்றுவதை எழையம் எங்ஙனம்
யாங்குஅறிகோம் ஐய?
நிறை மதியும் மீனும் என அன்னம் நீள் புன்னை
அரும்பிப் பூத்த
பொறை மலி பூங் கொம்பு ஏற வண்டு ஆம்பல்
ஊதும்புகாரே எம் ஊர் 29

## மதுவும் மங்கையும்

உண்டாரை வெல் நறா ஊண் ஒளியாப் பாக்கத்துள் உறை
ஒன்று இன்றித்
தண்டா நோய் மாதர் தலைத் தருதி என்பது யாங்கு அறிகோம்
ஐய!

வண்டல் திரை அழிப்ப கையால் மணல் முகந்து மதிமேல் நீண்ட
புண்தோய் வேல் நீர் மல்க மாதர் கடல் தூர்க்கும் புகாரே எம் ஊர் 30

## தோழியின் கவலை

புணர் துணையோடு ஆடும் பொறி அலவன் நோக்கி
இணர் ததையும் பூங்கானல் என்னையும் நோக்கி
உணர்வு ஒழியப் போன ஒலி திரை நீர்ச் சேர்ப்பன்
வணர் சுரி ஐம்பாலோய் வண்ணம் உணரேனால் 31

## தலைவி புலம்பல்

தம்முடைய தண்ணளியும் தாமும் தம் மான்தேரும்
எம்மை நினையாது விட்டாரோ? விட்டு அகல்க
அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால் 32

புன் கண்கூர் மாலைப் புலம்பும் என் கண்ணே போல்
துன்பம் உழவாய் துயிலப் பெறுதியால்
இன்கள் வாய் நெய்தால் நீ எய்தும் கனவினுள்
வன்கணார் கானல் வரக்கண்டு அறிதியோ? 33

புள்இயல் மான்தேர் ஆழி போன வழி எல்லாம்
தெள்ளுநீர் ஓதம் சிதைத்தாய் மற்று என் செய்கோ?
தெள்ளுநீர் ஓதம் சிதைத்தாய் மற்று எம்மோடு ஈங்கு
உள்ளாரோடு உள்ளாய் உணராய் மற்று என் செய்கோ? 34

நேர்ந்த நம் காதலர் நேமி நெடுந் திண்தேர்
ஊர்ந்த வழி சிதைய ஊர்கின்ற ஓதமே
பூந்தன் பொழிலே புணர்ந்து ஆடும் அன்னமே
ஈர்ந்தன் துறையே இதுதகாது என்னீரே 35

நேர்ந்த நம் காதலர் நேமி நெடுந் திண்தேர்
ஊர்ந்த வழி சிதைய ஊர்ந்தாய் வாழ் கடல் ஓதம்
ஊர்ந்த வழி சிதைய ஊர்ந்தாய் மற்று எம்மொடு
தீர்ந்தாய் போல் தீர்ந்திலையேல் வாழி கடல் ஓதம்!
36

## அன்னை அறிந்தால் என்ன செய்வேன்?

நல் நித்திலத்தின் பூண் அணிந்து,
நலம் சார் பவளக் கலை உடுத்து

செந் நெல் பழனக் கழனி தொறும்
திரை உலாவு கடல் சேர்ப்ப
புன்னைப் பொதும்பர் மகரத் திண்
கொடியோன் எய்த புதுப் புண்கள்
என்னைக் காணாவகை மறைத்தால்
அன்னை காணின் என் செய்கோ? 37

வாரித் தரள நகை செய்து
வாண்செம் பவள வாய் மலர்ந்து
சேரிப் பரதர் வலை முன்றில்
திரை உலாவு கடல் சேர்ப்ப
மாரிப் பீரத்து அலர் வண்ணம்
மடவாள் கொள்ள கடவுள் வரைந்து
ஆர்இக் கொடுமை செய்தார்? என்று
அன்னை அறியின் என் செய்கோ? 38

புலவுற்று இரங்கி அது நீங்கப்
பொழில் தண்டலையில் புகுந்து உதிர்ந்த
கலவைச் செம்மல் மணம் கமழ
திரை உலாவு கடல் சேர்ப்ப
பல உற்று ஒருநோய் துணியாத
படர் நோய் மடவாள் தனி உழப்ப
அலவுற்று இரங்கி அறியா நோய்
அன்னை அறியின் என் செய்கோ? 39

## மயக்கும் மாலை பொழுது

இளை இருள் பரந்ததுவே எல் செய்வான் மறைந்தனனே
களைவு அரும் புலம்பு நீர் கண் பொழிஇ உகுத்தனவே
தளை அவிழ் மலர்க் குழலாய் தணந்தார் நாட்டு உளதாம் கொல்
வளை நெகிழ எரி சிந்தி வந்த் இம் மருள் மாலை 40

கதிரவன் மறைந்தனனே கார் இருள் பரந்ததுவே
எதிர்மலர் புரை உண்கண் எவ்வ நீர் உகுத்தனவே
புதுமதி புரைமுகத்தாய் போனார் நாட்டு உளதாம் கொல்
மதி உமிழ்ந்து கதிர் விழுங்கி வந்த இம் மருள் மாலை? 41

பறவை பாட்டு அடங்கினவே பகல் செய்வான் மறைந்தனனே
நிறை நிலா நோய் கூர நெடுங்கண் நீர் உகுத்தனவே
துறு மலர் அவிழ் குழலாய் துறந்தார் நாட்டு உளதாம் கொல்
மறவை ஆய் என் உயிர்மேல் வந்த இம்மருள் மாலை 42

## நம்மை மறப்பாரோ நம் தலைவர்?

கைதை வேலிக் கழிவாய் வந்து எம்
பொய்தல் அழித்துப் போனார் ஒருவர்
பொய்தல் அழித்துப் போனால் அவர் நம் 43
மையல் மனம் விட்டு அகல்வார் அல்லர்

கானல் வேலிக் கழிவாய் வந்து
நீ நல்கு என்றே நின்றார் ஒருவர்
நீ நல்கு என்றே நின்றார் அவர் நம் 44
மான் நேர் நோக்கம் மறப்பார் அல்லர்

அன்னம் துணையோடு ஆடக் கண்டு
நென்னல் நோக்கி நின்றார் ஒருவர்
நென்னல் நோக்கி நின்றார் அவர் நம்
பொன்னேர் சுணங்கின் போவார் அல்லர் 45

## வினை விளை காலம்

எனக்கேட்டு
கானல் வரி யான் பாட தான் ஒன்றின் மேல் மனம் வைத்து
மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள் பாடினாள் என
யாழ் இசைமேல் வைத்துத் தன் ஊழ்வினை வந்துஉருத்தது ஆகலின்
உவவு உற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக் கை ஞெகிழ்ந்தனன் ஆய்
பொழுது ஈங்குக் கழிந்தது ஆகலின் எழுதும் என்று உடன் எழாது
ஏவலாளர் உடன் சூழ்தர கோவலன் தான் போன பின்னர்
தாதவிழ் மலர்ச் சோலை ஓதை ஆயத்து ஒலி அவித்து
கையற்ற நெஞ்சினளாய் வையத்தின் உள் புக்கு
காதலனுடன் அன்றியே மாதவி தன்மனை புக்காள் ஆங்கு
மா இரு ஞாலத்து அரசு தலைவணங்கும்
சூழி யானை சுடர் வாட் செம்பியன்
மாலை வெண்குடை கவிப்ப
ஆழி மால்வரை அகவையா எனவே! 52

■ ■ ■

[illegible] நீ சென்று உரைப்பாயாக" என்று கூறி முடித்தாள் மாதவி.

### வயந்தமாலை வருந்தித் திரும்பியமை 72-76

மாதவியின் உறுதி மிக்க சொற்களைக் கேட்ட வயந்தமாலை, பெருங்கவலை மனத்திற்குற்றது அவலமிக்க ஆழ் கடலில் இறங்கியவர்களைப் போன்று மனம் மயங்கி உழன்றவளாய், மாதவியிடமிருந்து பிரிந்து, சோர்வுற்றுச் சித்திராபதியைக் காணச் சென்றாள்.

## 3. மலர்வனம் புக்க காதை

### மணிமேகலையின் கண்ணீர் 1-10

வயந்தமாலையிடம் மாதவி உரைத்த பிறவித் துன்பப் பேச்சினை மணிமேகலையும் கேட்டாள். அதனின், சிறந்த மலரிலே தோன்றும் நறுமணம் போல அவளுக்கு நல்வினை பயனைத் தரும் நேரம் வந்துற்றது. தந்தை தாயாரான கோவலனும் கண்ணகியும் உற்ற கொடிய துயரச் செய்திகள் செவியிலே புகுந்து கட, மணிமேகலை நெஞ்சம் அழிந்தாள். வருத்தத்தால் உண்டாகிய கண்ணீர், அழகிய செவ்வரி படர்ந்த கண்களில் மை எழுதினை அழகைச் சிதைத்து, அவள் தொடுத்துக் கொண்டிருந்த மலர் மாலையின் மீதும் வீழ்ந்து அதனை நனைத்தது.

### மாதவியின் ஆணை 11-15

மாதவி, கண்ணீர் சிந்தும் தன் மகள் மணிமேகலையை நோக்கினாள். செந்தாமரை மலர் குளிர்ச்சி மிக்க முழுமதியைச் சேர்ந்தது போன்று தன் அழகிய செங்கையினால் மணிமேகலையின் கண்ணீரைத் துடைத்தாள். 'தூய மலர்மாலை நினது கண்ணீரால் தன் தூய தன்மையை

இழந்தது. ஆதலின் வேறு மாலை தொடுத்தற்கு ஏற்ற ஒளிமிக்க மலர்களை நீயே சென்று பறித்து வருக!' என உரைத்தாள்.

### சுதமதி வியப்புரை 16-25

அதுகேட்டு, தேன் பொருந்திய மலர்களை அணிந்த கூந்தலை யுடைய மணிமேகலையுடன் மலர் தொடுத்துக் கொண்டிருந்த சுதமதி துயருடன் கூறத் தொடங்கினாள்.

'தந்தை தாயர்க்கு உற்ற கொடுந் துயர்கேட்டு ஆறாத் துன்பத்தினை மேலும் மேலும் அடைகின்றனள் மேகலை. இவளது மதி போலும் முகத்தினுள், அழகு மிகும் நீல மலரை வென்ற, கண்ணினது கடை மணிகளினின்றும் சிந்தும் இக் கண்ணீரைக் கண்டானாயின் காமனும் தன் படையினை எறிந்து நடுங்குவான். பாவை போன்ற மணிமேகலையை ஆடவர் கண்டால் விட்டு நீங்கிச் செல்வரோ? தம் உள்ளம் தளராமல் நிற்பாராயின் அவர்கள் பேடியர் அல்லரோ?

### யான் வரும் காரணம் நீ அறியாயோ? 26-43

"அஃதன்றியும், இந் நகரத்திற்கு யான் வந்த காரணத்தை மாதவி நீ கேட்பாயாக! பரந்த கடல் தரும் வளம் நிறைந்த வேளாளர்க்குரிய சண்பை நகரில் வாழும் கௌசிகன் என்னும் அந்தணனின் ஒரே மகள் யான். ஒரு நாள், தனி வழிச் செல்ல அஞ்சாது, ஒன்றையும் எண்ணிப் பார்க்காத பேதை நெஞ்சத்துடன் மலர்வனம் சென்று மலர் பறித்துக் கொண்டிருந்தேன். அப்போது, மாருத வேகன் என்னும் ஒரு விஞ்சையன், திருமகளும் விரும்பும் இத் தொன்னகரான காவிரிப்பூம்பட்டினத்தில் நடைபெறும் இந்திர விழாவினைக் காண வந்திருந்தான். பூமாலையும் பொன் மாலையும் அணிந்தவனாக, பொன் அணிகளை யுடையவனாக, பூவுலகோர் கண்டறியாத, பலரும் தொழும் தெய்வ வடிவினனாக அவன் தோற்றமளித்தான். அவன் என்னைத் தூக்கிக் கொண்டு வானில் சென்று தன் வயப்படுத்தினான். யானும் செய்வதறியாது அவனுக்கு இணங்கி யிருந்தேன். பின்னர் அவ் விஞ்சையன் சிறிதும் அருளின்றி என்னை இங்கு விட்டு நீங்கிக் கண்ணிமைக்கும் நேரத்தில் நெடுந் தொலைவில் உள்ள தன் ஊர் சென்று மறைந்தான்."

பல வனம் வேண்டாம், உவ வனம் போதும்! 44-58

"ஆகவே, மாணிக்கப் பூங்கொம்பு போன்ற மணிமேகலை தனியே மலர் வனம் சென்று மலர் பறிக்கும் தன்மையின் அல்லள்.

"பல மலர்களை அடுக்கி வைத்த பந்தரைப் போன்ற நல்ல மர நிழலையுடைய இலவந்திகையின் மதிற்புறத்தே சென்றால், அங்கே சோழப் பேரரசனின் உரிமை மகளிர் பலர் உளர். (அரசனைச் சார்ந்தோர் இருத்தலால் அங்குப் போகக் கூடாது).

"இப்போது, இந்திர விழா நடைபெறும் காலம் ஆதலால் மக்கள் உய்யான வனத்தையும் நாடிச் செல்ல மாட்டார்கள். தேவர்களே அங்கிருப்பர். அவர்கள் எழுப்பும் ஆரவார ஒலியே அங்கு எழும்; வண்டினம் ஒலி எழுப்பாது. அங்குள்ள பல மரங்களும் வாடாத பல மாலைகளைத் தொங்க விடுதலால், கையிடத்துக் கொண்ட பாசத்தினை யுடைய பூதம் அவ் வுய்யான வனத்தைக் காக்கும். ஆதலால் அங்கும் யாரும் செல்ல விழையார். (உய்யானம், அரசர் விளையாடும் சோலை. தேவர்களால் அமைக்கப் பெற்றவை வாடா மாலைகள் ஆதலின், வண்டுகள் மொய்த்து ஒலி யெழுப்புதல் இல்லை).

"வெம்மையான ஞாயிற்றின் கதிர் வெப்பத்தால் விரிந்த தன் சிறகினை இழந்த சம்பாதி இருந்த சம்பாதி வனமும், மிக்க நீர்ப் பெருக்கினை யுடைய காவிரிப் பாவையின் தந்தையாகிய கவேரன் இருந்த கவேர வனமும் மிக்க முதுமையுடைய, தாக்கி வருத்தும் இரு பெண் தெய்வங்களைக் காவலாக உடையன. ஆதலால் அறிவுடையோர், அவ்விடங்களை ஏற்புடையவாகக் கருதி அவற்றிற் செல்ல மாட்டார்கள். (சம்பாபதி - கழுகரசன்; சடாயு என்பவனுடன் பிறந்தவன். இவன் ஆணவத்தால் ஞாயிற்றை நோக்கிச் செல்ல, அதன் வெம்மையால் சிறகு கரிந்து விழுந்தான். அப்படி விழுந்த இடம் சம்பாதி வனமாகும். காவிரியின் தந்தை கவேர முனிவன். இவன் பிரமதேவன் அருளால் விட்டுணு மாயையைத் தன் புதல்வியாகப் பெற்று வீடு

பேறடைந்தவன். பின் பிரமனின் ஆணையால் அப் புதல்வி காவிரி நதியானாள் என்பர்).

உவ வனத்தின் சிறப்பு 59-79

"உயிர்களிடத்தில் கொண்ட அருளும் அன்பும், ஆருயிர்களைப் பாதுகாக்கும் ஒப்பற்ற இலட்சியமும் நீங்காத நோன்பினையுடைய புத்த தேவனின் ஆணையால் பூத்துக் குலுங்கும் உவ வனம் என்னும் பூஞ்சோலை ஒன்று உண்டு. அதில் ஒரு பளிக்கறை மண்டபம் உள்ளது. அது, அங்கிருப்பவரின் ஓசையை வெளிப்படுத்தாது; உடலினை மட்டும் புறத்தே காட்டும். அந்த மண்டபத்தின் உள்ளே தூய நிறமுடைய மாணிக்கத்தால் அமைந்த, மிக்க ஒளி பரந்த, பதும பீடம் (புத்த பீடிகை) ஒன்று உண்டு. (உவ வனம், அதில் உள்ள பளிங்கு மண்டபம், அம் மண்டபத்தில் உள்ள பீடிகை எனக் கூட்டிப் பொருள் கொள்க).

"அந்தப் பீடத்தில் அரும்புகளை வைத்தால் அவை மலரும். மலர்ந்தவை ஆண்டு பல ஆயினும் வாட மாட்டா. அவற்றில் வண்டுகளும் மொய்க்கா. மாதவி! அதன் திறம் முன்னரே கூற மறந்தேன்! இப்போது சொல்கிறேன் கேள்! காணிக்கை செலுத்துதலை மேற்கொண்டு ஏதேனும் ஒரு தெய்வத்தை மனத்திலே நினைத்து, அப் பீடத்தில் மலரை இட்டால், அம் மலர் அவர் கருதிய தெய்வத்தின் அடியைச் சென்றடையும். ஒரு நினைப்பும் இன்றி மலரிட்டால் அது எங்கும் செல்லாது. அங்கேயே இருக்கும். இதற்குரிய காரணம் என்ன என வினவின், மனத்தில் ஒரு கருத்தும் இல்லை யென்றால்கூட முன் செய்த வினையானது தப்பாமல் பயனைத் தரும் என்னும் கொள்கையுடைய நோன்பிகள் வருத்தம் கொள்ளவும், மனத்தில் ஒரு கருத்தும் இல்லை யென்றால் பண்டை வினை பயன் தராது என்னும் கொள்கை உடையோர் கருத்துக்கு ஆதரவாகவும், மலர்களை இட்டு நிறுவும் பொருட்டு மயன் என்னும் தெய்வத் தச்சனால்

முன்னர் அமைக்கப்பட்ட பயனுடைய அமைப்பாகும், இப் பதும பீடம்.

### உவ வனம் நோக்கிச் செல்லல் 80-85

"மாதவியே! அச் சோலையே யன்றி, நின் மகள் வேறெங்கும் செல்லும் தகுதியில்லாதவள் ஆவாள்! மணிமேகலையுடன் மலர் கொய்ய யானும் செல்வேன்" என்று கூறி அழகிய பூங்கொம்பு போன்ற மணிமேகலையுடன், மணிகளையுடைய தேர் ஓடும் வீதியில் சுதமதி செல்லலானாள்.

### களிமகனும் சமண முனிவரும் 86-103

உறியிலே வைத்த குண்டிகை (பிச்சைப் பாத்திரம்) உடையவரும், அந்த உறியின் நுழை கோலாக அமைந்த திரண்ட பிரம்பினை உடையவரும், கேடற்ற மேன்மையுடைய அருகன் கோட்டத்தே உள்ளவரும், நாணத்தையும் ஆடையையும் ஒருங்கே நீத்தவருமான சமண முனிவர் ஒருவர் வந்து கொண்டிருந்தார். 'கண்ணால் காணவியலாத நுண்ணுயிர்க்கும் நடத்தல் முதலான தொழில்களால் துன்பம் உண்டாகுமோ? எனச் செயலற்று ஏங்கி, உண்ணா நோன்புடன் யானை போல் மெல்ல அசைந்து வரும் குளியாத உடலை யுடைய அம்முனிவரை ஒரு கள்குடியன் சந்தித்தான். 'அடிகளே, வாரும்! நும் மலர் போன்ற பாதங்களைத் தொழுதேன்! எம் பெருமானே! அடியேன் உரையைக் கேளுங்கள்! அழுக்குடைய உடலிலே புகுந்து கொண்டிருக்கும் உமது உயிரானது, புழுக்கத்தைத் தரும் அறையில் அகப்பட்டவரைப் போல உள்ளம் வருந்தாதோ! எம் பெருமான் உரைத்ததாகிய இம்மை இன்பத்தையும் மறுமை இன்பத்தையும் முடிவில்லாத முத்தி யின்பத்தையும், தன்னிடமிருந்து தரும் கொழுவிய மடல்களையுடைய தென்னையில் விளையும் இனிய மதுவில், கொலை என்பதும் உண்டோ? இதனை உண்டு தெளிவு பெற்று நுமது தவ நெறியில் இதனினும் மிக்க பயனைக் கண்டால், மதுவையே யன்றி எம்மையும் கை அசைத்து அகற்றி விடுங்கள்!' என்று இவ்வாறு அச்சைன முனிவரிடம் சூளுரைத்து 'கள்ளை

உண்பீராக!' என வேண்டிடுவான், அக்கள் குடியன். அந்தக் காட்சியைச் சிலர் கண்டு நின்றனர்.

## பித்தனின் செயல் 104-115

அலரிப் பூவால் திரளையாகத் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்தவன்; எருக்கினது குவிந்த முகைகளால் கோத்த மாலையைப் புனைபவன்; நைந்து போன கந்தல் துணியுடன், மிக உயர்ந்த கிளைகளில் ஒடித்த கள்ளிகளைக் கட்டிய ஆடை உடுத்தவன்; வெண்ணீறும் சந்தனமும் உடல் முழுதும் பூசி இருப்பவன்; பயனற்ற சொற்களைப் பலருடன் பேசுபவன்; அழுதும் விழுந்தும் தொழுதும் எழுந்தும் ஓடியும் திரிபவன்; ஒரு பக்கம் ஒதுங்கி நிற்பவன்; தன் நிழலையே பகைத்து நிற்பவன். இப்படிப் பித்துற்றுத் துன்புற்றவனைக் கண்டு சிலர் வருந்தி நின்றனர்.

## பேடியின் செயல் 116-125

சுருண்ட தாடி, இருண்டு அழகிய கூந்தல், பவளம் போன்ற சிவந்த வாய், வெண்மையான பற்கள், ஒளிமிக்க செவ்வரி பரந்த பெரிய கண்கள், வெண் சங்கால் செய்த காதணி, கரிய புருவத்தின் அருகில் வளைந்துள்ள பிறையனைய நெற்றி, காந்தள் மலர் போன்ற சிவந்த கை, எடுப்பான அழகிய கொங்கைகள், அகன்ற அல்குல், நுண்ணிய இடை, முழந்தாள் அளவு உடுக்கப்படும் வட்டுடை, தோள் முதலியவற்றில் எழுதப்பட்ட வரிக்கோலம் ஆகிய இத்தகு கோலத்துடன் வாணன் என்னும் அசுரனுடைய பெரிய 'சோ' என்னும் நகரத்தின் வீதியிலே நின்று, உலகளந்த உத்தமனின் மகனான காமன் முன்னர் ஆடிய 'பேடு' என்னும் கூத்தினைச் சிலர் கண்டு நின்றனர்.

## ஓவியம் காண்பவர் 126-131

புதிதாக வரும் மக்களின் முழக்கம் மிகுந்த பழைய நகராகிய புகாரில், செங்கற்களால் கட்டப்பட்ட உயர்ந்த மாடங்கள் தோறும், குற்றமற்ற தெய்வ வடிவினையுடைய தேவர் முதலாக எவ்வகை உயிர்களையும் ஒப்புமை காட்டி, சுண்ணாம்பினால் விளக்கத்துடன், சிறந்த ஓவியர் தீட்டிய கண்கவரும் ஓவியங்களைக் கண்டு சிலர் வியந்து நின்றனர்.

## பாலகுமரனைப் பார்த்து வியந்தனர் 132-146

இந்திர விழா நடைபெறும் மிகப் பெரிய வீதியில், பொன் சரட்டில் கோர்த்த நல்ல மணிக் கோவை விளங்கவும், வெண்சிறு கடுகை அப்பிய நெய்யணிந்த உச்சியின் மயிர்ப் புறத்தே சுற்றப்பட்ட கொக்கியினையுடைய முச்சரங்கள் அழகிய பிறை போன்ற நெற்றியில் தாழ்ந்து தொங்கவும், பொருள் நிரம்பாத மழலை மொழி பேசும் செவ்வாயினின்றும் சிந்தும் சின்னீர் மார்பிலுள்ள ஐம்படைத் தாலியை நனைக்கவும், அற்றத்தினை மறைக்காமல் சுற்றப்பட்ட அழகிய ஆடை, தொடுக்கப்பட்ட மாணிக்கக் கோவையாகிய உடுப்பொடு அசையவும், தளர்ந்த நடையையும் பொறுக்காத, ஒளிமிக்க அணிகள் அணிந்த புதல்வனைப் பொன் தேரின்மீதுள்ள புள்ளிகள் பொருந்திய முகத்தினையுடைய யானைமேல் ஏற்றி, ‘சிவபெருமானின் திருமகனான முருகவேளின் விழாத் தொடக்கத்தைக் காண்பீர்!’ என, அது கண்டு சிலர் வியந்து நின்றனர்.

## தாயோ கொடியள்! 147-158

இவ்வாறாகப் பல்வேறு காட்சிகளைக் கண்டு நின்ற அனைவரும், விராடனின் பெரிய நகரத்தில் அருச்சுனனாம் பேடியைக் காணுமாறு வந்து சூழ்ந்து கொண்ட ஆரவாரம் மிக்க மக்களைப் போல, மணிமேகலையைச் சூழ்ந்து கொண்டனர். அவர்கள், ‘எழில் விளங்கும் தோற்றத்தையுடைய இவளைத் தவநெறிப் படுத்திய தாயோ மிகக் கொடியவள்; அவள் தாயாகும் தகுதியும் இல்லாதவள்!’ என்று கூறி வருந்தினர். ‘இம் மணிமேகலை மலர் கொய்யப் பூம்பொழில் நுழைந்தால், அங்குள்ள அன்னப் பறவைகள் நாணாமல் இவள் நடை போல் தாமும் நடக்க வல்லனவோ? அங்குள்ள அழகான மயில்கள் இவள் எதிரே வந்து நின்று இவளது சாயலைத் தாமும் கற்குமோ? அங்குள்ள பைங்கிளிகள் இம் மங்கையின் பேச்சுக்குத் தோற்குமல்லவா? இவை மட்டுமல்ல, அங்குள்ள எவையுமே இவளுக்கு இணையாக மாட்டா!’ என்று கூறி அவர்கள் மேலும் வருந்தினர்.

### மலர் வனம் புகுந்தாள், மணிமேகலை 159-171

குரவம், வெண் கடம்பு, குருந்து, கொன்றை, மஞ்சாடி, மகிழம், சிவந்த காம்பை யுடைய வெட்சி, நாரத்தை, சுரபுன்னை, பரந்து மலரும் புன்னை, பிடவம், செம்முல்லை, வளைந்த முள்ளையுடைய தாழை, வெட்பாலை, மூங்கில், பெரிய அடியை யுடைய அசோகு, செருந்தி, வேங்கை, சண்பகம், தீயைப் போலச் சிவந்த மலர்களையுடைய இலவம் ஆகிய இவை அனைத்தும் விரிந்த மலர்களைப் பரப்ப, கைத்தொழில் வல்ல வித்தகரால் இயற்றப்பட்ட, சித்திரத் தொழில் அமைந்த ஒரு துகிலினைப் போர்த்திருப்பது போலத் தோன்றிய உவ வனத்தை, தொழுது காட்டிய சுதமதியுடன் மணிமேகலை மலர் கொய்யச் சென்றடைந்தாள்.

## 4. பளிக்கறை புக்க காதை

### மயில் ஆடு அரங்கம் காண்பாய்! 1-6

"சூரியனின் விரிந்த கதிர்களாகிய பெரும் படைக்கு அஞ்சிய இருள், அதனால் முற்றுகை யிடப்பட்டு ஓரிடத்திலே திரண்டிருப்பது போன்ற வியப்பை உண்டாக்கும் தன்மை யுடையது, இந்தப் பூம்பொழில். இங்கே தும்பிகள் வேய்ங் குழலின் இசையைப் பொருத்திக் காட்டுகின்றன. அவற்றிற்கு இயைய இளைய வண்டினங்கள் நல்ல யாழிசையை எழுப்புகின்றன. ஞாயிற்றின் கதிர்கள் நுழைய முடியாததும், குயில்கள் நுழையக் கூடியதுமான மரங்கள் அடர்ந்த இளமரக்கா இது. இந்த இளமரக்காவாகிய ஆடரங்கில் மயில்கள் ஆட, அது கண்டு களிக்கும் மந்திகளை நீ காண்பாயாக!

### அரச அவை காண்பாய்! 7-13

"மாசுமறுவற்றுத் தெளிந்த பளிங்கு போன்ற நீரையுடைய பொய்கையில், பசுமையான இலைகளின் பரப்பில் பல மலர்களிடையே நின்று, தனியே உயர்ந்து காணப்படும் மணமுள்ள ஒரு தாமரை மலரில், அன்னம் இனிதாக அரச

# சீவகசிந்தாமணி

திருத்தக்கதேவரால் எழுதப்பட்ட நூல் சீவகசிந்தாமணியாகும். ஐம்பெருங்காப்பியங்களுள் இதுவும் ஒன்று. இதன் காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு ஆகும். 3147 பாடல்களும், 13 இலம்பகங்களையும் கொண்ட இந்நூல் விருத்தப்பாவால் ஆனது. காப்பியத் தலைவன் சீவகன் "காந்தருவத்தை முதலாக எண்மரை மணம் புரிகின்றான். இதற்கு மணநூல் என்ற பெயரும் உண்டு. இதன் ஆசிரியர் "நரிவிருத்தம்" எனும் வேறு நூலும் எழுதியுள்ளார். சமண சமயத்தைச் சார்ந்த இந்நூல் இயற்கை வருணனைகள், கருத்துச் செறிவும், இனிய நடையும் பெற்று நீதிகளை உணர்த்தும் வகையிலும் அமைந்துள்ளன. நச்சினார்க்கினியார் முதன் முதலில் நூல் முழுமைக்கும் உரை கண்டுள்ளார். இந்நூலின் "சுரமஞ்சரியார் இலம்பகம்" நும் பாடப்பகுதியாகும்.

## சுரமஞ்சரியார் இலம்பகம்

### சீவகன் மணந்து கொண்ட நங்கையின் பெயரைத் தோழர்கள் கேட்க, அவன் கூறுதல்

1. வாளி ரண்டு மாறுவைத்த போல்ம மைக்கண் மாதரார்
நாளி ரண்டு சென்ற என்று நைய மொய்கொள் காவினுள்
தோளி ரண்டும் அன்ன தோழர் தோன்ற லைப்பு ணர்ந்தபின்
தாளி ரண்டும் ஏத்தி நின்று தையல் நாமம் வேண்டினார்.

2. பாடு வண்டி ருந்த அன்ன பல்க லைஅ கல்அல்குல்
வீடு பெற்ற வரும் விழும் வெம்மு லைவி மலையென்று
ஆடு வான்அ ணிந்த சீர்அ ரம்பை அன்ன வாள்நுதல்
ஊடி னும்பு ணர்ந்தது ஒத்தி னிய வள்உ ளாளரோ

### தான் கூறுகின்ற பெண்ணைச் சீவகன் மணந்தால் அவனைக் "காமதிலகன்" என்று அழைப்போம் எனப் புத்திசேனன் கூறுதல்

3. அம்பொ ரைந்து டைய்ய காமன் ஐயன் என்ன அந்தணன்
நம்பு நீரர் அல்லர் நன்கு ரங்கு நீர் ராயினும்
தம்கு ரவ்வர் தாம்கொ டுப்பின் நெஞ்ச நேர்ந்து தாழ்வர்தாம்
பொங்க ரவ்வுஅல் குலார்எனப் புகன்று சொல்லினான்.

4. அற்றும் அன்று கன்னி யம்ம டந்தை மாா்அ ணிநலம்
முற்றி னாரை நீடு வைப்பின் மூள்கும் வந்து பாவமும்
குற்ற மற்று மாகும் என்று கோதை சூழ்ந்து கூறினாா்க்கு
உற்ற டுத்த யாவு யிா்த்தொ ழிதல் யாா்க்கும் ஒக்குமே

5. மதுக்குடம் விரிந்தன மாலை யாரொடும்
புதுக்கடி பொருந்துதி புக்க வூரெலாம்
விதிக்கடை காணலாம் வீதி மாநகா்
மதிக்கிடை முகத்தியொா் மடந்தை ஈண்டையாள்

6. ஆடவா் தனதிடத்து அருகு போகினும்,
நாடிமற் றவா்பெயா் நயந்து கேட்பினும்,
வீடுவல் உயிரென வெகுளும்; மற்றவள்
சேடியா் வழிபடச் செல்லும் செல்வியே.

7. காமனே செல்லினும் கனன்று காண்கிலாள்
வேமெனக்கு உடம்பு எனும் வேய்கொள் தோளியை
ஏமுறத் தவள்நலம் நுகரின் எந்தையை
யாமெலாம் அநங்கமா திலகன் என்றுமே

### சீவகன் வஞ்சினம் கூறல்

8. "தாசியா் முலைகள் தாக்கத் தளையவிழ்ந்து உடைந்த தண்தாா்
வாசம்கொண்டு இலங்கு முந்நூல் வலம்படக் கிடந்த மாா்ப!
பேசிபெயரி னாளைப் பேதுறாது ஒழிவேன் ஆகில்
ஆகம்அன் பிலாத புன்பெண் கூந்தல்யான் அணைவல்" என்றான்.

### மேலும் சீவகன் கூறுதல்

9. வண்டுதேன் சிலைகொள் நாண்ஆம் மாந்தளிா் மலா்கள் அம்பா
கொண்டவன் கோட்டம் தன்னுள் கொடியினைக் கொணா்ந்து நீலம்
உண்டது காற்றி ஆண்போ் ஊட்டுவல் உருவக் காமன்
கண்ட பொற் படிவம் சாா்ந்து கரந்திரு நாளை" என்றான்.

### சீவகன் முதிய அந்தண வடிவம் தாங்கி, சுரமஞ்சரியின் கன்னிமாடத்தை அடைதல்

10. இழைக்கண் வெம்முலை இட்டிடை ஏந்தல்குல்
மழைக்கண் மாதரை மாலுறு நோய் செய்வான்
முழைக்கண் வாளரி ஏறன மொய்ம்பினான்
உழைக்க ணாளா்க்கு உரைத்து எழுந் தான் அரோ

11. சோருங் காரிகை யாள்கர மஞ்சரி
ஆரம் சூடிய அம்முலைப் பூந்துடம்
தாரும் மார்பமும் தண்ணெனத் தோய்வதற்கு
ஓரும் உள்ளம் உடன்றுஎழு கின்றதே

12. கடைந்த பொற் செப்பெனக் கதிர்த்து வீங்கின
வடங்சுமந்து எழுந்தன மாக்கண் வெம்முலை
மடந்தைதன் முகத்தஎன் மனத்தின் உள்ளன
குடங்கையின் நெடியன குவளை உண்கணே.

13. ஏத்தரு மல்லிகை மாலை ஏந்திய
பூத்தலைக் கருங்குழல் புரியி னால்புறம்
யாத்துவைத் தலைக்கும்இவ் அருளி லாள் நலம்
காய்த்தி என் மனத்தினைக் கலக்கு கின்றதே.

14. சில்லரிக் கிண்கிணி சிலம்பும் சீறடிச்
செல்விதன் திருநலம் சேரும் வாயில்தான்
அல்லல் அம்கிழவ னோர் அந்த ணாளனாய்ச்
செல்லல்யான் தெளிதக வுடைத்து என்று எண்ணினான்.

15. அணங்கு அரவு உரித்த தோல் அனைய மேனியன்
வணங்கு நோன் சிலையென வளைந்த யாக்கையன்
பிணங்கு நூல் மார்பினன் பெரியதோர் பொத்தகம்
உணர்ந்து மூப்பு எழுதினது ஒப்பத் தோன்றினான்

16. வெண்ணரை உடம்பினன் விதிர்த்த புள்ளியன்
நுண்ணவிர் அறுவையன் நொசித்த நோக்கினன்
கண்ணவிர் குடையினன் கைத்தண்டு ஊன்றினன்
பெண்ணலங் காதலில் பேயும் ஆயினான்.

17. யாப்புடை யாழ்மிடறு என்னும் தோட்டியால்
தூப்புடை அவள் நலம் தொடக்கும் பாகனாய்
மூப்பெனும் முகபடாம் புதைந்து முற்றிழை
காப்புடை வளநகர் காளை எய்தினான்.

**வாயிற் காவலர்கள் உள்ளே விட, சிவகன் பெண்களின் அந்தப்புரத்திற்குச் செல்லுதல்.**

18. தண்டுவலி யாக நனி தாழ்ந்து தளர்ந்து ஏங்கிக்
கண்டுகடை காவலர்கள் கழறமுகம் நோக்கிப்
பண்டையிளங் காலுவப்பன் பாலடிசில் இந்நாள்
கண்டுநயந் தார்தருவ காதலிப்பன் என்றான்.

19. கையில் தொழு தார்கழிய மூப்பில்செவி கேளார்
மையலவர் போலமனம் பிறந்தபகை சொன்னார்
பைபநடக் கென்று பசிக்கு இரங்கியவர் விடுத்தார்
தொம்பின் முலை யவர்கள் கடைத் தோன்றல் நனிபுக்கான்.

## பெண்கள் கடுஞ்சொல் கூறி, சீவகனை உள்ளே வரவொட்டாது தடுத்தல்

20. கோதையொடு தாழ்ந்துகுழல் பொங்கி ஞிமிறு ஆர்ப்ப
ஓதமணி மாலையோடு பூண்பிறழ ஓடி
ஏதமிது போமின் என என்னும்உரை ஈயான்
ஊதஉகு தன்மையினொடு ஒல்கியுற நின்றான்.

21. கச்சு விசித்து யாத்தகதிர் முலையர்மணி அயில்வாள்
நச்சுநுனை அம்புசிலை நடுங்கஉடன் ஏந்தி
அச்சமுறுத்து அமுதுபுளித் தாங்குத்தம தீஞ்சொல்
வெச்சென்றிடச் சொல்லி விரி கோதையவர் சூழ்ந்தார்.

## வேறு சில பெண்கள் சீவகனது முதிய அந்தணத் தோற்றத்தைக் கண்டு மனம் இரங்கிச் சுரமஞ்சரியிடம் அவன் வருகையைத் தெரிவித்தல்

22. பாவமிது நோவவுரை யன்மின் மிது பார்ப்பார்
சாவர் தொடி னேகடிது கண்டவகை வண்ணம்
ஓவியர்தம் பாவையினொடு ஒப்பரிய நங்கை
ஏவல்வகை கண்டறிதும் என்று சிலர் சொன்னார்.

23. கையவளை மையகுழல் ஐயரிய வாட்கண்
நையுமிடை வெய்யமுலை நங்கையொரு பார்ப்பான்
உய்வதிலன் ஊழின்முது மூப்பினொடும் வந்தான்
செய்வதுரை நொய்தின்எனச் சேறும் எழுக" என்றாள்.

## சுரமஞ்சரி முதிய அந்தண (சீவக)னைக் கண்டு, உரையாடி பின் உபசரித்தல்

24. மாலைபல தாழ்ந்துமதுப் பிலிற்றிமணங் கமழும்
கோலவகில் தேய்வைகொழுஞ் சாந்தமுலை மெழுகிப்
பாவைமணி யாழ்மழலை பசும்பொன் நிலத்து இழிவாள்
சோலைவரை மேவிழியும் தோகைமயில் ஒத்தாள்.

25. சீறடிய கிண்கிணி சிலம்பொடு சிலம்ப
வேறுபடு மேகலைகள் மெல்லென மிழற்றச்
சேறுபடு கோதைமிசை வண்டுதிசை பாட
நாறுமலர்க் கொம்பர்நடை கற்பதென வந்தாள்.

26. வந்தவரவு என்னையென வாள்கண்மட வாய்கேள்
சிந்தைநலி கின்றதிரு நீர்க்குமரி யாட
அந்தில்அதன் ஆயபயன் என்னைமொழிக என்றாள்
முந்தி நலி கின்றமுது மூப்பொழியும் என்றான்.

27. நறவிரிய நாறுகுழ லாள்பெரிது நக்குப்
பிறருமுள ரோபெறுநர் பேணிமொழிக என்னத்
துறைபடிந்து சேர்ந்துதொழு தாடுநரில் என்றாற்கு
அறிதிர்பிற நீவிரென ஐயமிலை என்றான்.

28. செத்துமரம் மொய்த்த மழை பால்பெயரும் என்பார்
பித்தரிவர் உற்றபிணி தீர்த்துமென எண்ணி
அத்தமென மிக்கசுடர் அங்கதிர் சுருக்கும்
மொய்த்தமணி மாடமிசை அத்தக வடைந்தான்.

29. வடிவமிது மூப்பளிது வார்பவள வல்லிக்
கடிகைதுவர் வாய்கமலம் கண்ணொடு அடி வண்ணம்
கொடிது பசி கூர்ந்துளது கோல் வளையின் நீரே
அடிசில் கடி தாக்கி இவணே கொணர்மின் என்றாள்.

30. நானமுறைத் தாங்கு நறு நீர் அவனை ஆட்டி
மேனிகிளர் வெண் துகிலும் விழுப்பொனியல் நூலும்
பால்நலம்கொள் தீங்கிளவி பவித்திரமும் நல்கத்
தானமர்ந்து தாங்கியமை தவிசின்மிசை இருந்தான்.

31. திங்கள்நலம் சூழ்ந்த திரு மீன்களெனச் செம்பொன்
பொங்குகதிர் மின்னுபுகழ்க் கலங்கள் பலபரப்பி
இங்குசுவை இன்னமுதம் ஏந்த மிகு சான்றோன்
எங்குமிலை இன்னசுவை என்றுடன் அயின்றான்.

32. தமிழ்தழிய சாயல்வர் தங்குமலர்த் தூநீர்
உமிழ்கரகம் ஏந்தஉர வோன் அமர்ந்து பூசி
அமிழ்தனைய பஞ்சமுக வாசம் அமைத் தாய்ந்த
கமழ்திரையும் காட்ட அவை கொண்டுகவுள் அடுத்தான்

## சுரமஞ்சரி கேட்கும் வினாக்களுக்கு முதிய அந்தணன் (சீவகன்) இருபொருள்பட நயமாகப் பதில் கூறுதல்

33. வலல்தெனை என்னமறை வல்ல மட வாயான்
எல்லைஎவன் என்னப் பொருள் எய்திமுடி காறும்
சொல்லிமினும் நீவிர் கற்ற காலமெனத் தேன்சோர்
சில்லென்கிளிக் கிளவியது சிந்தையிலன் என்றான்.

**சீவகனின் முதுமைக் கோலத்தைக் கண்டு மனமிரங்கிய சுரமஞ்சரி தன்னுடைய கட்டிலில் படுத்துக் கொள்ளச் சொல்ல அவனும் அவ்வாறே செய்தல்.**

34. இன்னவர்கள் இல்லை நிலத் தென்று வியந்து ஏத்தி
அன்னம்அன மென்னடையி னாள் அமர்ந்து நோக்கப்
பின்னையிவள் போகுதிறம் பேசும்என எண்ணித்
தன்னஞ்சிறி தேதுயின்று தாழஅவள் நக்காள்.

35. கோலமணி வாய்க்குவளை வாட்கண் மட வாளைச்
சாலமுது மூப்புடைய சாமிமுகம் நோக்கிக்
காலும்மிக் நோம்சிறிது கண்ணும் துயில் குற்றேன்
ஏலங்கமழ் கோதை இதற்கு என் செய்குரை என்றான்.

36. மட்டுவிரி கோதைமது வார்குழலி னாள்தன்
பட்டுநிணர் கட்டில்பரி வின்றிஉறைக என்றாள்
இட்டவணை மேலினிது மெல்லென அசைந்தான்
கட்டழல்செய் காமக் கடலைக் கடைய்ல் உற்றான்.

**இராப் பொழுது வந்த அளவில் ஆடவர் மகளிர் இருந்த நிலையைக் கூறுதல்**

37. காலையோடு தாழ்ந்து கதிர் பட்டது கலங்கி
மாலையோடு வந்துமதி தோன்றமகிழ் தோன்றி
வேலையோடு கண்ணியர்தம் வீழ்துணைவர் திண்தோள்
கோலமுலை யால்எழுதக் கூடியதை யன்றே.

38. ஏந்துமலர்க் சேக்கையில் வளர்த்த விடு புகையும்
வாய்ந்தமலர்க் கோதை அமிர் துயிர்க்கும் நறும்புகையும்
கூந்தல் அகில் புகையும் துகில் கொழுமென் நறும்புகையும்
வாய்ந்தவரை மழையின்உயர் மாடத்தெழுந் தனவே

39. ஆசில்அடு பாலமிர்தம் சிறிய அயின் றம்பூங்
காசில்கடி மாலைகலம் நொய்யமதி கவற்றும்
தூசுநறுஞ் சாந்தினிய தோடிவைகள் தாங்கி
மாசில்மட வார்கண்மணி வீணைநரம்பு ளர்ந்தார்

40. பூஞ்சதங்கை மாலைபுகழ்க் குஞ்சிப்பொருவு இல்லார்
வீங்குதிரள் தோளும்தட மார்பும்விரை மெழுகித்
தீங்கரும்பு மென்றனைய இன்பவளச் செவ்வாய்த்
தேங்கொள் அமிர்து ஆர்ந்து செழுந் தார்குழையச் சேர்ந்தார்

### சீவகன் இன்னிசையைப் பாடலும் சுரமஞ்சரி உள்பட மகளிர் அனைவரும் மயங்கலும்

41. பொன்னனையாள் இன்அமளிப் பூவணையயின் மேலான்
முன்னியதன் மன்றலது முந்துற முடிப்பான்
மன்றுமொரு கீதமது பாட முன்றாங்கு
இன்னமிர்த மாகஇனை யாரும்அது கேட்டார்.

42. மன்மதன்ம னிக்கு நல்மருட்டும் என்று மால்கொள்வார்
இன்ன தன்று இயக்கர் இன்னி யக்க வந்த தென்றுதம்
பின்னும் முன்னும் நோக்குவார் பேது சால எய்துவார்
கன்னி தன்ம னத்தி றைந்த காளை நாமம் வாழ்த்துவார்

43. கொம்பின் ஒத்து ஒதுக்கி யாழ்கு ழங்கல் மாலை தாங்கியும்
அம்பின் ஒத்த கண்ணி னார டிக்க லம்அ ரற்றவும்
நம்பி தந்த கீத மேந யந்து காளை ஓடினார்
வெம்பு வேட்கை வேனி லானின் வேற லானும் ஆயினான்.

44. தாம மாலை வார்கு ழங்குடங்க ணார்க்கு இடங்கழி
காமன் அன்ன காளை தன்க ருத்தொடு ஒத்தது ஆகலான்
மாமலர்த் தெரியலான் மணிமி டற்றி டைக்கி டந்த
சாம கீதம் மற்றும் ஒன்று சாமி நன்கு பாடினான்.

45. கள்ள மூப்பின் அந்தணன் கனிந்த கீத வீதியே
வள்ளி வென்று நுண்ணிடைம ழைமலர்த்த டங்கணார்
புள்ளுவம் மதிமகன் புணர்த்த வோசை மேற்புகன்று
உன்னம் வைத்த மாமயில் குழாத்தினோடி எய்தினார்

### சீவகனின் இசை வலையில் சுரமஞ்சரி அகப்படுதல்

46. இனிச்சிறிது எழுந்து வீங்கி யிட்டிடை கோறும் நாங்கள்
எனக்கென்று கொறுப்ப போலும் இளமுலைப் பரவை அல்குல்
கனிப்பொறை மலிந்த காமர் கற்பக மணிக்கொம் பொப்பாள்
பனிப்பிறைப் பூணினான்தன் பாண்வலைச் சென்றுபட்டாள்.

### அந்தணச் சீவகன் தோழியர்கள் வேண்டிக் கொள்ள சுரமஞ்சரி முன் இசைப்பாட்டுப் பாடுதல்

47. அடிக்கலம் அரற்ற அல்குல் கலைகலந் தொப்ப வந்து
முடிப்பதென் பெரிது மூத்தேன் முற்றிழை அரிவை என்ன
வடிக்கணாள் நக்கு நாணித் தோழியை மறைந்து மின்னுக்
கொடிகுழாத் திடையோர் கோலக் குளிர் மணிக் கொம்பின்
நின்றாள்.

48. இளையவன் காணின் மன்னொ என்செய்விர் நீவிர் என்ன
விளைமதுக் கண்ணி மைந்தர் விளிகளைத் தோழி கூற
முளை எயிற்று இவளை யாரும் மொழிந்தனர் இல்லை என்றோ
உளைவது பிறிதும் உண்டோ ஒண்தொடி மாதர்க்கு என்றான்

49. வாய்ந்த இம் மாதர் சுண்ணம் சீவகன் பழித்த பின்றைக்
காய்ந்தனள் என்று கூறக் காளைமற்று இவட்குத் தீயான்
மாய்ந்தனள் போலும் என்ன மாதரார் ஒருங்கு வாழ்த்தி
ஆய்ந்தனம் ஐயன் உய்ந்தான் அறிந்தனம் அதனை என்றார்

50. காலுற்ற காம வல்லிக் கொடியெனக் கலங்கி நங்கை
மாலுற்று மயற்க யாங்கள் மடக்கிளி தூது விட்டேம்
சேலுற்ற நெடுங்கண் செவ்வாய்த் தத்தை தன் செல்வம் கண்டே
பாலுற்ற பவளச் செவ்வாய்த் தந்தை யால் பரிவு தீர்ந்தேம்.

51. அன்பொட்டி யெமக்கோர் கீதம் பாடுமுன் அடித்தி யாரும்
முன்பட்ட தொழிந்து நுங்கண் முகவியர் முன்பு தீர்த்தார்
பொன்தொட்டேம் யாமும் நும்மைப் போகொட்டோம் பாடல் கேளாது
என்பட்டு விடினும் என்றார் இலங்குபூங் கொம்பொடு ஒப்பார்.

52. பாடுதும் பாவை பொற்பே பற்றி மற்று எமக்கு நல்கின்
ஆடமைத் தோளி னீர் அஃ தொட்டுமேல் கேண்மின் என்ன
நாடியார் பேயைக் காண்பார் நங்கைகாள் இதுவும் ஆமே
ஆடுவது ஒன்றும் மன்றிவ் ஆண்மகன் உரைப்ப தென்றார்.

53. பட்டுலாய்க் கிடந்த செம்பொன் பவளமோடு இமைக்கும் அல்குல்
ஒட்டினாள் அதனை ஓராது உலம்பொரு தோளி னானும்
பட்டவாள் நுதலி னாய்க்குப் பாடுவல் காமன் தந்த
தொட்டிமை யுடைய வீணைச் செவிச்சுவை அமிர்தம் என்றான்.

54. வயிரவில் உமிழும் பைம்பூண் வனமுலை மகளிர் தம்முள்
உயிர்பெற எழுதப் பட்ட ஓவியப்பாவை யொப்பாள்
செயிரில் வாள்முகத்தை நோக்கித் தேன்பொதிந்து அமுதம் ஊறப்
பயிரிலா நரம்பில் கீதம் பாடிய தொடங்கி னானே.

## சீவகன் பாடிய இன்னிசைக் கீதங்கள்

55. தொடித்தோள் வளை நெகிழத் தொய்யின் முலைமேல்
வடிக்கேழ் மலர் நெடுங்கண் வார் புயலும் காலும்
வார்புயலும் காலும் வளைநெகிழும் நந்திறத்தது
ஆர்வமுறு நெஞ்சம் அழுங்குவிக்கும் மாலை

70. குங்குமம் குயின்ற கொம்மைக் குவிமுலை குளிர்ப்பத் தைவந்து
அங்கலுழ் மேனி அல்குல் காசுடன் திருத்தி அம்பொன்
பொங்கு பூஞ் சிலம்பில் போர்த்த பூந்துகள் அவித்து மாதர்
கொங்கலர் கோதை சூட்டி குழல் நலம் திருத்தி னானே.

71. வானார் கமழ்மதுவும் சாந்தும் ஏந்தி
மதுத்துளித்து வண்டும் கரும்பும் மூசும்
தேனார் பூங்கோதாய் நினக்குக் காமன்
சிலையிரண்டும் செவ்வனே கோலித் தந்தான்
தானராப் பண்ணித் தடறு நீக்கித்
தண்குருதி தோய்த்துக் தகைமை சான்ற
ஊனார்ந்த ஓரிணை அம்பும் தந்தான்
என்னை உளனாக வேண்டி னானே.

72. கண்ணக் கண்ணி கமழ் பூங்குழல்
கரும்பேர் தீஞ் சொல்லாள் கதிர்முலைகளின்
வண்ணக்கு வானும் நிலனும் எல்லாம்
விலையே மழைமின்னு நுகப்பினாரைப்
பெண்ணுக்கு அணியாக வேண்டி மேலைப்
பெரியோர் பெருமான் படைத்தா னென்று
புண்ணக்க வேலான் புகழ நாணிப்
பூ நோக்கிப் பூக்கொசிந்த கொம்பொத் தாளே.

## சீவகன் சுரமஞ்சரி உறுதியான வார்த்தைகளைச் சொல்லி அனுப்ப, அவளும் தோழியர் கூட்டத்துடன் தன் மாளிகை அடைதல்

73. இறங்கிய மாதர் தன்னை எரிமணிக் கடகக் கையால்
குறங்கின் மேல்தழுவி வைத்துக் கோதைஅங் குருதி வேலான்
அறந்தலை நீங்கக் காக்கும் அரசன் யான்ஆக நாளைச்
சிறந்தநின் நலத்தைச் சேரே னாய்விடில் செல்க என்றான்.

74. வில்விடு மணிசெய் ஆழி மெல்விரல் விதியில் கூப்பி
நல்லடி பணிந்து நிற்ப நங்கை நீ நடுங்க வேண்டா
செல்க எனச் சிலம்பு செம்பொற் கிண்கிணி மிழற்ற ஒல்கி
அல்குல் காசு ஒலிப்ப ஆயம்பாவை சென்று எய்தி னாரே.

75. பருமணிப் படங்கொள் நாகம் பையெனப் பரந்த அல்குல்
எரிமணிப் பூணி னானுக்கு இன்னலம் ஒழிய ஏகி
திருமணிச் சிவிகை எறிச் செம்பொன் நீள் மாடம் புக்காள்
விரிமணி விளங்கு மாலை வெமமுலை வேற்க ணாளே.

## தோழர்கள் சீவகனைப் புகழ்ந்தபின், அவனுடைய திருமணம் பற்றிப் பேச, சுரமஞ்சரியின் சுற்றத்தாரிடம் தக்காரை அனுப்புதல்

76. திருவில்தான் மாரி கற்பான் துவலை நாள் செய்வ தேபோல்
உருவிற்றாய்த் துளிக்கும் தேறல் ஒங்குதார் மார்பன் தோழர்
பொருவிற்றான் நம்பி காம திலகன் என்று இருந்த போழ்தில்
செருவிற்றாழ் நுதுலி னாள் கண் மணத்தி றம் செப்பு கின்றார்.

77. கனைகடல் அமுதும் தேனும் கலந்துகொண்டு எழுதப் பட்ட
புனைகொடி பூத்ததே போல் பொறுக்கலா நுகப்பில் பாவை
நனைகுடைந் துண்டு தேக்கி நன்மணி வண்டு பாடும்
புனைகடி மாலை மாதர் திறத்திது மொழிந்து விட்டார்.

## சுரமஞ்சரியின் தந்தை குபேரதத்தன் தடுமாறி நிற்றல்

78. ஐயற்கென்று உரைத்த மாற்றம்
கேட்டலும் அலங்கல் நாய்கன்
வெய்யதேன் வாய்க்கொண் டாற்போல்
விழுங்கலோடு உமிழ்தல் தேற்றான்
செய்வதேன் நோற்றி வாதேன்
நோற்றிலாள் திறத்தின் என்று
ஊமயல் கொண் டிருப்ப அப்பால்
குமரிதன் மதியில் சூழ்ந்தாள்.

## தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றல்

79. பொற் பகை தாமக் கந்து பொருந்திய மின்னுப்போல
எற்பக எரியும் மாலை பவளத்தூண் பொருந்தி இன்னீர்க்
கற்பெனும் மாலை வீசி நாணெனும் களிவண்டு ஒப்பிச்
சொற்புகா் இன்றித் தோழிக்கு அறத்தினோடு அரிவை நின்றாள்.

## தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்

80. வழிவளர் மயிலஞ் சாயல் பவழப்பூம் பாவை யன்ன
கழிவளர் கயற்கண் நங்கை கற்பினை அறிந்து தோழி
அழிமது மாலை சேர்த்தி அடிபணிந்து ஆர வாழ்த்திப்
பொழிமதுப் புயல் ஐங் கூந்தல் செவிலியைப் பொருந்திச்
சொன்னாள்.

## செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றலும் நற்றாய் அதனைப் பற்றிக் கூறலும்

81. நனைவளர் கோதாய் நற்றாய் நங்கைக்கு ஈது உள்ளம் என்று
அனைவளர் குவளை உண்கண் சுமதிக்குச் செவிலி செப்பக்
கனை யிருள் கனவில் கண்டேன் காமர்பூம் பொய்கைவற்ற
அனையதாம் கன்னி நீரின் தந்த தாம் நங்கைக்கு என்றாள்.

## நற்றாய், தந்தைக்கு அறத்தொடு நிற்றல்

82. கெண்டையும் சிலையும் திங்கள் இளமையும் கடந்து தேங்கொள்
தொண்யைங் கனியும் முத்தம் தொழுத்தக அணிந்து தூங்கும்
குண்டல முடைய திங்கள் இதுவென முகத்தி தாதை
வண்புகழ்க் குபேரதத்தன் கேட்டனன் மனைவி சொன்னாள்.

83. செருவிளைத்து அனலும் வேலோய்! சிறுமுதுக் குறைவி தானே
பெருவளைப் பிட்டுக் க்ாத்த கற்பிது போலும் ஐயன்
கருவிள்ளைத் தாய்ந்த கண்ணம் வாட்டினன் என்று கண்டாய்
திருவிளை தேம்பெய் மாரி பாற்கடல் பெய்தது என்றாள்.

## சீவகன்—சுரமஞ்சரி திருமணம்

84. கேட்பது விரும்பி நாய்கன் கிளைக்கெலாம் உணர்த்தி யார்க்கும்
வேட்பன அடிசில் ஆடை விழுக்கலன் மாலை சாந்தம்
கோட்குறை வின்றி யாக்கிக் குழுமு இயம் கறங்கி ஆர்ப்ப
நாட்கடி மாலை யாற்கு நங்கையை நல்கி னானே.

## குபேரதத்தன் தந்த சீதனம்

85. பரியகம் சிலம்பு பைம்பொன் கிண்கிணி ஆர்ந்த பாதத்து
அரிவையர் ஆடல் மிக்கார் அருமணி வீணை வல்லார்
உரியநூற் றெண்மர் செம்பொன் ஒன்றரைக் கோடி மூன்றூர்
எரியழல் முன்னர் நேர்ந்தேன் என் மகட்கு என்று சொன்னான்.

## சீவகன்—சுரமஞ்சரியின் ஊடலும்—கூடலும் நிறைந்த இன்ப வாழ்க்கை

86. மாசறு மணியும் முத்தும் வயிரமும் ஒளிரும் மேனி
ஆசறு செம்பொன் ஆர்ந்த அலங்கல் அம் குன்ற னானும்
தூசுறு பரவை அல்குல் துளங்குபூங் கொம்ப னாளும்
காசற் கலந்த இன்பம் கடலகத்து அழுந்தி னாரே.

87. பொன்வரை பொருத யானைப் புணர் மருப்பு அனைய வாகித்
தென்வரைச் சாந்து மூழ்கித் திரள் வடம் சுமந்து வீங்கி

மின்வளர் மருங்குல் செற்ற வெம்முலை மணிக்கண் சேப்பத்
தொன்னலம் பருகித் தோன்றல் துறக்கம் புக் கவர்கள் ஒத்தான்.

88. வரிக்கழல் குரிசில் மார்பும் மடந்தைவெம் முலையும் தம்முள்
செருச்செய்து திளைத்துப் போரில் சிலம்பொலி கலந்த பாணி
அரிப்பறை அனுங்க ஆர்க்கும் மேகலைக் குரலோடு ஈண்டிப்
புரிக்குழல் புலம்ப வைகிப் பூவணை விடுக்க லானே.

89. மணியியல் வள்ளத்து ஏந்த மதுமகிழ்ந்து அனந்தர் கூர
அணிமலர்க் குவளைப் பைம் போது ஒருகையின் அருளி
அம்பொன்
பிணையனாள் அருகு சேரில் பேதுறும் நுகப்பு என்று எண்ணித்
துணையமை தோள்கள் தம்மால் தோன்றல்தான் புல்லி னானே.

90. மல்லலங் கங்கை போலும் பலர்முயங்கு ஆர மார்பில்
புல்லன்மின் போமின் வேண்டா என்றவள் புலந்து நீங்க
முல்லையங் கோதை ஒன்றும் பிழைப்பிலேன் முனியல் நீஎன்று
அல்லலுற்று அரத்தம் ஆர்ந்த சீறடி தொழுதிட் டானே.

91. வட்டிகை பாவை நோக்கி மகிழ்ந்திருந் திலிரோ என்னாத்
தொட்டிமை உருவம் தோன்றச் சுவரையே பொருந்தி நின்றாய்
கட்டழகு உடைய நங்கை நீயெனக் கருதிக் கண்ணான்
ஒட்டியான் நோக்கிற் றென்றான் ஒருபிடி நுகப்பி னாட்கே.

92. நுண்துகில் நெகிழ்ந்த அல்குல் மணிபரந் திமைப்ப நொந்து
கண்களை இடுகக் கோட்டிக் காமத்தில் செயிர்த்து நோக்கிக்
குண்டலம் இலங்கக் கோதை கூந்தலோடு அவிழ்ந்து சோர
ஒண்தொடி ஊடி நின்றாள் ஒளிர்மணிப் பூங்கொம்பு ஒப்பாள்.

93. கிழவனாய்ப் பாடி வந்தென் கீழ்ச்சிறை இருப்பக் கண்டேன்
எழுதிய பாவை நோக்கி இமைய வித் திருப்பக் கண்டேன்
ஒழிக இக் காமம் ஒரூர் இரண்டஃகம் ஆயிற் றென்றாங்கு
அழுதகண் ணீர்கள் மைந்தன் ஆவிபோழ்ந் திட்ட அன்றே.

94. அலங்கல் தாது அவிழ அஞ்செஞ் சீறடி அணிந்த அம்பூஞ்
சிலம்பின் மேல் சென்னி சேர்த்திச் சிறியவர் செய்த தீமை
புலம்பலர் பொறுப்பர் அன்றே பெரியவர் என்று கூறி
இலங்குமேல் கண்ணிஊடல் இளையவன் நீக்கினானே.

95. யாழ் கொன்ற கியவி யாள்தன் அமிழ் துறும் புலவி நீக்கிக்
காழின்றிக் கனிந்த காமக் கொழுங்கனி நுகர்ந்து காதல்

தாழ்கின்ற காம மாரபன் றைதய லோடு ஆடி விள்ளான்
ஊழ் சென்ற மதியம் வெய்யோன் ஒட்டியென் றாய தொத்தான்.

96. பச்சிலைப் பட்டும்முத்தும் பவளமும் இமைக்கும் அல்குல்
கச்சிலை வேற்கண் மாதர் நகை முக முறுவல் மாந்தி
இச்சையும் குறிப்பும் நோக்கி எய்வதே கரும மாகக்
கைச்சிலை கணையோடு ஏந்திக் காமன் இக் கடையைக்
காப்பான்.

### சீவகன் சுரமஞ்சரியைப் பிரியக் கருதுதல்

97. கடிப்பிணை காது சேர்த்திச் சிகழிகைக் காதம் நாறத்
தொடுத்தலர் மாலை சூட்டிக் கிம்புரி முத்தம் மென் றோள்
அடுத்தணிந்து ஆகம் சாந்தின் அணிபெற எழுதி அல்குல்
உடுத்தபொற் கலாபம் தை வந்து ஒளிவளை திருத்தினானே.

### சீவகன் தனது பிரிவைச் சுரமஞ்சரியிடம் கூறுதல்

98. இலங்கு வெள் ளருவிக் குன்றத் தெழுந்த தண் தகரச் செந்தீ
நலங்கிளர் அகிலும் தேனும் கட்டியும் நன்கு கூட்டிப்
புலம்பற வளர்ந்த அம்மென் பூம்புகை அமளி ஆங்கண்
விலங்கரசு அன்னய காளை வெள்வளைக்கு இதனைச்
சொன்னான்.

99. கரும நீ கவல வேண்டா கயற்கணாய் பிரிவல் சின்னாள்
அருமைநின் கவினைத் தாங்கல்அது பொருள் என்று கூறப்
பெரும நீ வேண்டிற் றல்லால் வேண்டுவ பிறிதொன்று உண்டோ?
ஒருமைநின் மனத்திற் சென்றேன் உவப்பதே உவப்ப தென்றாள்.

100 நாணொடு மிடைந்த தேங்கொள் நடுக்குறுகிளவி கேட்டே
பூண்வரும் பொறிப்பப் புல்லி புனைநலம் புலம்ப வைகேன்
தேன்மிடை கோதை என்று திருமகன் எழுந்து போகி
வாள்மிடை தோழர் சூழத் தன்மனை மகிழ்ந்து புக்கான்.

### தன் தாய் சுநந்தையின் துயரைச் சீவகன் போக்குதல்

101 புரவியும் களிறும் நோக்கிப் பொன்னெடுந் தேரும் நோக்கி
இரவினும் பகலினும் ஓவாது "என்மகன் யாண்டை யான்" என்று
அழுதகண் ணீரினாலே கைகழீஇ அவலிக் கின்ற
மெழுகெரி முகந்தது ஒக்கும் தாய்மெலிவு அகற்றி னானே.

## உறவினர்கள் மகிழ்ச்சி

102 ஒற்றரும் உணர்தல் இன்றி உரையவித்து உறுப்பி னாலே
சுற்றத்தார்க்கு உரைப்ப ஈண்டித் தொக்குடன் தழுவிக் கொள்வார்
எற்றுவார் இணைந்து சோர்வார் நம்பியோ நம்பி என்ன
உற்றுடன்று இழுத கண்ணீர் காலலைத்து ஒழுகிற்று அன்றே.

## கந்துக்கடன் கூற்று

103 கந்துகண் கழறக் கல்லென் கடற்றிரை அவிந்த வண்ணம்
வந்தவர் புலம்பு நீங்க மறைபுறம் படுமென்று எண்ணி
எந்தைதான் இறந்த நாள் இன்று எனநகர் இயம்பி யாரும்
அந்தமில் உவகை தன்னால் அகங்குளிர்ப்பு எய்தி னாரே.

## காந்தருவதத்தை, "குணமாலையைச் சார்க" எனக் கூற, சீவகனும் செல்லுதல்

104 செங்கயல் மழைக்கண் செவ்வாய்த் தத்தையும் மகிழ்ந்து
தீஞ்சொல்
"எங்கையைச் சென்று காண்மின் அடிகள்!" என்று இரந்து கூற
மங்கல வகையிற் சேர்ந்து மதுத்துளி யறாத மாலை
கொங்கலர் கண்ணி சேர்த்திக் குங்குமம் எழுதி னானே.

## குணமாலையின் வருத்தத்தை நீக்கி, சீவகன் ஆறுதல் கூறல்

105 "தீவினை உடைய என்னைத் தீண்டன்மின், அடிகள் வேண்டா.
பாவியேன்" என்று நொந்து பரிந்தழுது உருகி நையக்
"காவியங் கண்ணி! ஒன்றும் கவலல் யான் உய்ந்த தெல்லாம்
நாவியே நாறு மேனி நங்கைநின் தவத்தின்" என்றான்.

106 அன்னமென் நடையும் நோக்கும் சாயலும் மணியும் ஏரும்
மின்னினுள் நுசுப்பும் வெய்ய முலைகளும் முகமும் தோன்ற
என்மனத்த எழுதப் பட்டாய் ஆயினும் அரிவை கேளாய்
உன்னை யான் பிரிந்து நாள் ஓர் ஊழியே போன்றது என்றான்.

## சீவகன் அந்நகரை விட்டு நீங்குதல்

107 இளையவள் மகிழ்வ கூறி இன்துயி லமர்ந்து பின்னால்
விளைபொரு ளாய வெல்லாம் தாதைக்கே வேறு கூறிக்
கிளையவர் சூழ வாமான் வாணிக னாகிச் கேடில்
தளையவிழ் தாம மார்பன் தன்னகர் நீங்கி னானே.

அலகு — 2

## கம்பராமாயணம்

தமிழ்க் காப்பியங்களில் தனக்கெனத் தனியிடம் பிடித்த காப்பியம் கம்பராமாயணம். கம்பர் இதற்கு இராம அவதாரம் என பெயரிட்டார். இராமனை மும்மூர்த்திகளுக்கும் மேலானவராகக் கருதும் பண்புடையவராய் கம்பர் விளங்குகிறார். கம்பர் தன் நூலுக்கு மூல நூலாக வான்மீகி இராமாயணத்தைக் குறிப்பிடுகிறார். இந்நூல் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர் காண்டம், யுத்த காண்டம் என ஆறு காண்டங்களையும், படலங்களையும் கொண்டது. பெரும்பாலும் கலிவிருத்தப் பாக்களையே கையாண்டுள்ளார். கம்பர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டார். இராமாயணத்தை கம்பர் பதினைந்தே நாளில் எழுதி முடித்தார் என்பதனை,

"விழுந்த ஞாயிறு எழுவதன் முன்முறை
வேதியருடன் ஆராய்ந்து
எழுந்த ஞாயிறு விழுவதன் முன்கவி
பாடினது எழுநூறே"

எனப் இப்பாடல் விளக்குகின்றது. வைணவ ஆச்சாரியரான நாதமுனிகள் கம்பருக்கு கவிச்சக்கரவர்த்தி என்றும் பட்டமளித்ததாகக் கூறுவர். இவரது படைப்புகளான ஏரெழுபது, சிலை எழுபது சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி ஆகியவற்றை இயற்றியுள்ளார்.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்,
வள்ளுவர்போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை!"

என கம்பனின் சிறப்பினை பாரதி புகழ்ந்துள்ளார். கம்பரின் நாடகப் புலமைக்குச் சான்றாக விளங்கும் இலங்கை எரியூட்டுப் படலம் காப்பியத்தின் சுவை மிகுந்த பகுதிகளுள் ஒன்றாகும். இப்பகுதி நமக்கு பாடப் பகுதியாக அமைந்துள்ளது.

## இலங்கை எரியூட்டுப் படலம்
### தீப்பற்ற நகர மாந்தர் ஓடுதல்

1. கொடியைப் பற்றி விதானம் கொளுத்தியே
நெடிய தூணைத் தழுவி நெடுஞ் சுவர்
முடியச் சுற்றி முழுதும் முருக்கிற்றால்
கடிய மா மனைதோறும் கடுங் கனல்

2. வாசல் இட்ட எரி மணி மாளிகை
மூச முட்டி முழுதும் முருக்கலால்
ஊசலிட்டென ஓடி உலைந்து உள்ள
பூசலிட்ட இரியல் புரம் எனாம்

### மாதர்கள் வருந்திய பான்மை

3. மணியின் ஆய வயங்கு ஒளி மாளிகை
பிணியின் செஞ் சுடர்க் கற்றை பெருக்கலால்
திணி கொள் தீ உற்றது உற்றில தேர்கிலார்
அணி வளைக் கை நல்லார் அமைந்துள்ளார்

4. வானகத்தை நெடும் புகை மாய்த்தலால்
போன திக்கு அறியாது புலம்பினார்
தேன் அகத்த மலர் பல சிந்திய
கானகத்து மயில் அன்ன காட்சியார்

### தலையில் தீப்பற்றியதும் பற்றாததும் தெரியாமை

5. கூய் கொழும் புனல் குஞ்சியில் கூந்தலில்
மீச் சொரிந்தனர் வீரரும் மாதரும்
ஏய்ந்த தன்மையினால் எரி இன்மையும்
தீக் கொளுந்தினவும் தெரிகின்றிலார்.

### தீயும் புகையும் ஓங்கிப் பரவுதல்

6. இல்லில் தங்கு வயங்கு எரி யாவையும்
சொல்லின் தீர்ந்தன போல்வன தொல் உருப்

புல்லிக் கொண்டன மாமணிப் புனைமீன் ஆரல்
கல்வி அம் இமயம் எய்தும் அருந்தவர்போல்

7. ஆயது அங்கு ஓர் ஆயன் உரு ஆர் அழ
தாய் அணைந்து உலகங்கள் தழல்கொளங்களால்
மீ எழுந்து கரியன மேகமெல்லாம்
போய் எழுந்து பரந்தது எரியும் புகை

8. நீலக் குன்றம் நிரைத்தன நீர்த் திவலை
மாலின் வெருக் கிளை பாலைமலை மாழுகை
மேல் விழுந்து எரி மூழ்கும் விழுங்கலால்
தோல் உரிந்து கழன்றன தோள் எலாம்

9. மீது இயம் கலந்தனவன்ன செம் புகை
சோதி மங்கலத் திசையடு கற்றவன்
வேதி மங்குலின் வீழ் புகை வீழ் பட
ஓதிமங்களின் மாறுள் ஒதுங்கினார்.

10. பொடித்து எழுந்து பெரும் பொறி போவன
இடிக் குலங்களின் வீழ்தலும் எங்கணும்
வெடித்த வேலை வெதும்பிட மீன் குலம்
துடித்து வெந்து புலர்ந்து உயிர் சோர்ந்தவால்.

11. பருகு தீ மடுத்து உள்ளுறப் பற்றலால்
அருகு நீடிய ஆடகத் தாமரைகள்
உருகி வேலையின் ஊடு புக்கு உற்றன
திருகு பொன் நெடுந் தண்டின் திரண்டவால்.

12. உரையின் முந்து உலகு உண்ணலும் எரி அதால்
வரை நிவந்தன பல் மணி மாளிகை
நிரையும் நீள் நெடுஞ் சோலையும் நிற்குமோ
தரையும் வெந்தது பொன் எனும் தன்மையால்.

13. கல்லினும் வலிதாம் புகைக் கற்றையால்
எல்லி பெற்றது இமையவர் நாடு இயல்
வல்லி கோலி நிவந்தன மா மணிச்
சில்லியோடும் திரண்டன தேர் எலாம்.

14. பேய மன்றினில் நின்று பியங்கு எரி
மாயர் உண்ட நறவை மடுத்ததால்
தூயர் என்றிலர் வைகு இடம் துன்னினால்
தீயர் அன்றியும் தீமையும் செய்வரால்.

15. தழுவு இலங்கைதழங்கு எரி தாய்ச்
வழு இல் வேலை உலையின் மறுகின:
எழு கொழுஞ்சுடர்க் கற்றை சென்று எய்தலால்
குழுவுதண் புனல்மேகம் கொதித்தவே.

16. ஊனில் ஓடும் எரியொடு உயங்குவார்
கானில் ஓடும் நெடும் புனல் காண் எனா
வானில் ஓடும் மகளிர் மயங்கினார்
வேனில் ஓடு அருந் தேரிடை வீழ்ந்தனர்.

17. தேன் அவாம் பொழில் தீப் பட சிந்திய
சோனை மா மலர்த் தும்பி தொடர்ந்து அயல்
போன தீச் சுடர் புண்டரிகத் தடங்
கானம் ஆம்என வீழ்ந்து கரிந்தவே

18. நல் கடன் இது நம் உயிர் நாயகர்
மற்கடம் தெற மாண்டனர் வாழ்வு இலம்
இல் கடந்து இனி ஏகலம் யாம் எனா
வில் கடந்த நுதலியர் வீடினார்.

19. பூக் கரிந்து முறி பொறி ஆய் அடை
நாக் கரிந்து கினை நறுஞ் சாம்பல் ஆய்
மீக் கரிந்து நெடும் பணை வேர் உறக்
காக் கரிந்து கருங் கரி ஆனவே.

20. கார் முழுக்க எழும் கனல் கற்றை போய்
ஊர் முழுக்க வெதுப்ப உருகின
சோர் ஒழுக்கம் அறாமையின் துன்றுபொன்
வேர் விடுப்பது போன்றன விண் எலாம்.

21. நெருக்கி மீ மிசை ஓங்கு நெருப்பு அழல்
செருக்கும் வெண் கதிர் திங்களைச் சென்று உற
உருக்க மெய்யின் அமுதம் உகுத்தலால்
அரக்கரும் சிலர் ஆவி பெற்றார் அரோ.

22. பருதி பற்றி நிமிர்ந்து எழு பைங் கனல்
கருதி முற்றும் எரிந்து எழு கார் மழை
அருகு சுற்றும் இருந்தையதாய் அதின்
உருகு பொன் திரள் ஒத்தனன் ஒண் கதிர்

23. தளை கொளுத்திய தாவு எரி தாமணி
முளை கொளுத்தி முகத்திடை மொய்த்த பேர்

உளை கொளுத்த உலந்து உலைவு உற்றன
வளை குளப்பின் மணி நிற வாசியே.

## அரக்கர் உற்ற அவலம்

24. எழுந்து பொன் தலத்து ஏறலின் நீள் புகைக்
கொழுந்து சுற்ற உயிர்ப்பு இலர் கோள் உற
அழுந்து பட்டுளர் ஒத்து அயர்ந்தார் அழல்
விழுந்து முற்றினர் கூற்றை விழுங்குவார்.

25. கோசிகத் துகில் உற்ற கொழுங் கனல்
தூசின் உத்தரிகத்தொடு சுற்று றா
வாச மைக் குழல் பற்ற மயங்கினார்
பாசிழைப் பரவைப் படர் அல்குலார்.

26. நிலவு இலங்கிய துகிலினை நெருப்பு உண நிருதர்
இலவினும் சில முத்து உள எனும் நகை இளையார்
புலவியின் கரை கண்டவர் அமுது உகப் புணரும்
கலவியின் கரை கண்டிலர் மண்டினர் கடல்மேல்

27. பஞ்சரத்தொடு பசு நிறக் கிளி வெந்து பதைப்ப
அஞ்சனக் கண்ணின் அருவி நீர்முலை முன்றில் அலைப்ப
குஞ்சரத்து அன கொழுநரைத் தழுவுறும் கொதிப்பால்
மஞ்சிடைப் புகும் மின் எனப் புகையிடை மறைந்தார்

28. வரையினைப் புரை மாடங்கள் எரி புக மகளிர்
புரை இல்பொன் கலன் வில்லிட விசும்பிடைப் போவார்
கரைஇல் நுண்புகைப் படலையில் கரந்தனர் கலிங்கத்
திரையினுள் பொலி சித்திரப் பாவையின் செயலார்

## நந்தவனங்கள் அழிந்த காட்சி

29. அகருவும் நறுஞ்சாந்தமும் முதலிய அனேகம்
புகர் இல்நல் மரத்து உறுவெறி உலகு எலாம் போர்ப்ப
பகரும் ஊழியில் கால வெங் கடுங்கனல் பருகும்
மகர வேலையின் வெந்தன நந்தனவனங்கள்

30. மினல் பரந்து எழு கொழுஞ் சுடர் உலகு எலாம் விழுங்கி
நினைவு அரும் பெருத் திசைஉற விரிகின்ற நிலையால்
சினை பரந்து எரி சேர்ந்திலா நின்றவும் சில வெங்
கனல் பரந்தவும் தெரிகில கற்பகக் கானம்.

31. மூளும் வெம் புகை விழுங்கலின் சுற்றுற முழுநீர்
மாளும் வண்ணம் மாமலை நெடுந் தலைதொறும் மயங்கிப்
பூளை வீய்ந்தன்ன போவன புணரியில் புனல் மீன்
மீள யாவையும் தெரிந்தில முகில் கணம் விசைப்ப

32. மிக்க வெம்புகை விழுங்கலின் வெள்ளியங்கிரியும்
ஒக்க வெற்பினோடு அன்னமும் காக்கையின் உருவ
பக்க வேலையின் படியது பாற்கடல் முடிவில்
திக்கயங்களும் கயங்களும் வேற்றுமை தெரியா

## நெருப்புக்கு அஞ்சிக் கடலில் வீழ்தல்

33. கரிந்து சிந்திடக் கடுங்கனல் தொடர்ந்து உல் கதுவ
உரிந்த மெய்யினர் ஓடினர் நீரிடை ஒளிப்பார்
விரிந்த கூந்தலும் குஞ்சியும் மிடைதலின் தானும்
எரிந்து வேகின்றது ஒத்தது எறி திரைப் பரவை

34. மருங்கின்மேல் ஒரு மகவு கொண்டு ஒரு தனி மகவை
அருங் கையால் பற்றி, மற்றொரு மகவு பின் அரற்ற
நெருங்கி நீண்டிடு நெறி குழல் சுறுக் கொள நீங்கிக்
கருங் கடல்தலை வீழ்ந்தனர் அரக்கியர் கதறி

## ஆயுத சாலையில் படைக்கலங்கள் அழிதல்

35. வில்லும் வேலும் வெங் குந்தமும் முதலிய விறகாய்
எல்லுடைச் சுடர் எனப் புகர் எஃகு எலாம் உருகி
தொல்லை நல் நிலை தொடர்ந்த பேர் உணர்வு அன்ன தொழிலால்
கில்லி உண்டையின் திரண்டன படைக்கலத் திரள்கள்

## எரி பற்றுதலும் யானைகள் ஓடுதலும்

36. செய் தொடர்க் கன வல்லியும் புரசையும் சிந்தி
நொய்தின் இட்ட வன்தறி பறித்து உடல் எரிநுழைய
மொய் தடச் செவி நிறுத்தி வால் முதுகினில் முறுக்கி
கை எடுத்து அழைத்து ஓடின ஓடை வெங்களிமா

## பறவைகள் கடலில் விழுந்து இறத்தல்

37. வெருளும் வெம் புகைப் படலையின் மேற்செலவெருவி
இருளும் வெங் கடல் விழுந்தன எழுந்தில பறவை
மருளின் மீன்கணம் விழுங்கிட உலந்தன மனத்துஓர்
அருள் இல் வஞ்சரைத் தஞ்சம் என்று அடைந்தவர் அனைய

## இராவணன் மனையில் தீ

38. நீரை வற்றிடப் பருகி மா நெடு நிலம் தடவி
தாருவைச் சுட்டு மலைகளைத் தழல்செய்து தனி மா
மேருவைப்பட பற்றி எரிகின்ற கால வெங் கனல்போல்
ஊரை முற்றுவித்து இராவணன் மனை புக்கது உயர்தீ.

39. வான மாதரும் மற்றுள மகளிரும் மறுகிப்
போன போன திக்கு அறிகிலர் அனைவரும் போனார்
ஏனை நின்றவர் எங்கணும் இரிந்தனர் இலங்கைக்
கோன் அவ் வானவர் பதி கொண்ட நாள் என்க
குலைந்தார்

40. நாவியும் நறுங் கலவையும் கற்பகம் நக்க
பூவும் ஆரமும் அகிலும் என்று இனையன புகைய
தேவு தேன்மழை செறிபெருங் குலம் எனத் திசையின்
பாவைமார் நறுங்குழல்களும் பரிமளம் கமழ்ந்த.

41. சூழும் வெஞ்சுடர் தொடர்ந்திட யாவருமம் தொடரா
ஆழி வெஞ்சினத்து ஆண்தொழில் இராவணன்
மனையில்
ஊழி வெங் கனல் உண்டிட உலகம் என்று உயர்ந்த
ஏழும் வெந் தென எரிந்தன நெடு நிலை ஏழும்.

42. பொன் திருத்தியது ஆதலால் இராவணன் புரை தீர்
குன்றம் ஒத்து உயர் தட நெடுமா நிலைக் கோயில்
நின்று சுற்று எரி பருகிட நெகிழ்வுற உருகி
தென் திசைக்கும் ஓர் மேரு உண்டாம் எனத் தெரிந்த

## இலங்கை முற்றும் எரியுண்ணல்

43. அனைய காலையில் அரக்கனும் அரிவையர் குழுவும்
புனை மணிப் பொலி புட்பக விமானத்துப் போனார்
நினையும் மாத்திரை யாவரும் நீங்கினர் நினையும்
வினை இலாமையின் வெந்தது அவ் விலங்கல் மேல்
இலங்கை

## எரியுற்ற காரணம் என்? என இராவணன் கேட்டல்

43. ஆழித் தேரவன் அரக்கரை அழல் எழ நோக்கி
ஏழுக்கு ஏழ் என அடுக்கிய உலகங்கள் எரியும்

ஊழிக் காலக் கந்து உற்றதோர் பிறிது வேறு உண்டோ
பாழித் திக்கை வென்று தன் நகர் காவல் பகர்ந்தான்.

## "குரங்கு கட்டுண்டு" என அரக்கர் மொழிய இராவணன் சினத்தல்

44. அரக்கர் கூட்டிலோர் தங்கிளை திருவொடும் காணார் இருக்கின்ற வல் அரக்கர் ஏது இயம்பினர் இறைவோர் தாங்க வேலையில் நெடிய தன் வால் இட்ட தழலால் குரங்கு கட்டுது ஏது என்றதும் இராவணன் கொதித்தான்

45. இன்று புன் தொழில் குரங்கு தன் வலியினால் இலங்கை நின்று வெந்து மா நீறு எழுகின்றது நெருப்புத் தின்று தேக்கிடுகின்றது தேவர்கள் சிரிப்பார் நன்று நன்று போர் வலி என இராவணன் நக்கான்.

## குரங்கைப் பற்ற இராவணன் கட்டளை

46. உண்ட நெருப்பைக்
கண்டனர் பற்றிக்
கொண்டு அணைக என்றான்
அண்டரை வென்றான்.

47. உற்று அகலாமுன்
செற்ற குரங்கைப்
பற்றுமின் என்றான்
முற்ற முனிந்தான்.

## அனுமானைப் பிடிக்க வீரர் விரைதல்

48. சார் அயல் நின்றார்
வீரர் விரைந்தார்
நேருதும் என்றார்
தேரினர் சென்றார்.

49. எல்லை இகந்தார்
வில்லர் வெகுண்டார்
பல் அதிகாரத்
தொல்லர் தொடர்ந்தார்.

50. நீர் கெழு வேலை நிமிர்ந்தார்
தார் கெழு தானை சமைந்தார்
போர் கெழு மாலை புனைந்தார்
ஓர் எழு வீரர் உயர்ந்தார்.

51. விண்ணினை வேலை விளிம்பு ஆர்
மண்ணினை ஓடி வளைந்தார்
அண்ணலை நாடி அணைந்தார்
கண்ணினின் வேறு அயல் கண்டார்.

### அரக்கர்கள் சூழ்தல் கண்டு அனுமான் பொரத் தொடங்குதல்

52. பற்றுதிர் பற்றுதிர் என்பார்
எற்றுதிர் எற்றுதிர் என்பார்
முற்றினர் முற்றும் முனிந்தார்
கற்று உணர் மாருதி கண்டான்.

53. ஏல்கொடு வஞ்சர் எதிர்ந்தார்
கால்கொடு கைகொடு கார்போல்
வேல்கொடு கோலினர் வெந் தீ
வால்கொடு தானும் வளைந்தான்.

### அரக்கர் பலர் மடிதல்

54. பாதவம் ஒன்று பறித்தான்
மாதிரம் வாலின் வளைத்தான்
மோதினன் மோத முனிந்தார்
ஏதியும் நாளும் இழந்தார்.

55. நூறிட மாருதி நொந்தார்
ஊறிட ஊன் இடு புண்ணீர்
சேறு இட ஊர் அடு செந்தீ
ஆறிட ஓடினது ஆறாய்.

56. தோற்றினர் துஞ்சினர் அல்லார்
ஏற்று இகல் வீரர் எதிர்ந்தார்
காற்றின் மகன் கலை கற்றான்
கூற்றினும் மும்முடி கொன்றான்.

57. மஞ்சு உறழ் மேனியர் வன் தோள்
மொய்ம்பினர் வீரர் முடிந்தார்
ஐம்பதினாயிரர் அல்லார்
பைம் புனல் வேலை படிந்தார்.

58. தோய்த்தனன் வால் அது தோயக்
காய்ச்சின வேலைக் கலந்தார்
போய்ச் சிலர் பொன்றினர் போனார்
ஏச்சு என மைந்தர் எதிர்ந்தார்.

59. சுற்றின தேரினர் தோலா
வில் தொழில் வீரம் விளைத்தார்
ஏற்றினன் மாருதி ஏற்ற
உற்று எழுவோரும் உலந்தார்

## அனுமான் சீதையை வணங்கி இலங்கையை விட்டுப்போக, அழல் மறைதல்

60. விட்டு உயர் விஞ்சையர் வெந் தீ
வட்ட முலைத் திரு வைகும்
புள் திறள் சோலை புறத்தும்
கட்டிலது என்பது சொன்னார்.

61. வந்தவர் சொல்ல மகிழ்ந்தான்
வெந் திறல் வீரன் வியந்தான்
உய்ந்தனென் என்ன உயர்ந்தான்
பைந்தொடி தாள்கள் பணிந்தான்.

62. பார்த்தனள் சானகி பாரா
வேர்த்து எரி மேனி குளிர்ந்தாள்
வார்த்தை என் வந்தனை என்னா
போர்த் தொழில் மாருதி போனான்.

63. தெள்ளிய மாருதி சென்றான்
கள்ள அரக்கர்கள் கண்டா
எள்ளுவர் பற்றுவர் என்னா
ஒள் எரியோனும் ஒளித்தான்.

**இலங்கை எரியூட்டு படலம் முற்றிற்று**

■ ■ ■

1040. கரிய திருகளத்தை உடைய சிவபெருமானின் அருகில் பொருந்திய உருத்திர பசுபதியாரின் திறத்தைத் துதித்து, மதில் சூழ்ந்த தில்லையின் எல்லையில் நாளைப் போவாரான செயல் கொண்ட புறத்திருத் தொண்டரின் திறத்தை இனி கூறுவோம்.

உருத்திர பசுபதி நாயனார் புராணம் முற்றிற்று.

## 24. திருநாளைப் போவார் நாயனார் புராணம்

தில்லைக்கு 'நாளைப் போவேன்' 'நாளைப் போவேன்' என்று கூறியதால் இவர் திருநாளைப் போவார் என்று பெயர் பெற்றார்.

1041. நீர்மிக்க கொள்ளிடம் என்ற ஆறானது பொன்னையும் நல்ல மணிகளையும் தன் அலைகளாகிய கைகளால் எடுத்துத் தர, தம்மிடம் படர்ந்துள்ள தாமரை மலர்களான கைகளால் ஏற்றுக் கொள்கின்ற அகன்ற வயல்களையுடைய நீர்வளம் வாய்ந்த சோழ நாட்டில் உள்ள மேற்காநாடு என்ற பகுதியில் உள்ளது ஆதனூர் என்பது. அது உலகத்தவர் சொல்லிக் கொண்டாடத் தக்க சிறப்பையுடைய பழைய பதியாகும்.

1042. திருநீற்றின் பெரிய ஒளி நெருங்கி விளங்கும் அந்த ஊரில் வளர்ந்த கரும்பின் சாற்றால் அலைகின்ற வலிய குலைகளையுடைய வயல்களிலே, தகட்டைப் போன்ற வரால் மீன்கள் எழுமாறு எருமைகள் பூட்டிய ஏர்கள் செல்லும் அந்த வழியில், கலப்பையானது வன்மையான கொழுவினால் கிழித்த படைச்சாலின் வழியில், மெல்ல அடைந்து மேலே ஏறிச் சென்று, சேற்றில் வாழும் நண்டுகள் கருவை ஈனும். அந்தக் கரு உண்ணுமாறு செழுமையான தாமரை மலர்கள் தேனைச் சொரியும்.

1043. பூஞ்சோலைகள், அரும்புகள் நிறைந்த கொம்புகள் செறிந்து மிக்க மணம் கமழும் தளிர்களால் ஞாயிற்று மண்டலத்தைத் தடவும் செழுமையான மரங்களின் கூட்டம் பெருகி, மேகங்களும் பொருந்தி, அசைந்து அலைவதால், தேன் வண்டுகள் பக்கங்களில் எல்லாம் சூழ, நீர் மழையோ அல்லது தேன் மழையோ, ஒழியாமல் பெய்த வண்ணம் விளங்கும்,

1044. வாளை மீன்கள் இளைய பாளைகள் விரிந்து மணம் வீசுவனவும், பசுமையான காய்களையுடைய வளமான குலைகளை யுடையனவுமான தென்னை மரங்களின் அடிப்பகுதியில் மரம் அசையும்படி முட்டிப் பெரிய நீர்ப் பள்ளங்களினின்றும் மேலே எழுந்து பாய்ந்து, கீழே சேற்றில் புதையுமாறு விழுந்த தென்னையின் நெற்றுக்கள் மிதக்கும்படி வலிய பலா மரங்களின் நீண்ட முதிர்ந்த கனிகள் கிழிந்து வழிந்து பெருகிய தேன் வெள்ளத்தில் எழுந்து குதிக்கும்,

1045. வயலில் உண்டாகும் வளங்களும் கைவினையால் விளைவிக்கப்படும் பசிய தோட்ட நிலங்களினின்றும் வரும் வளங்களும் அகன்ற இடம் எங்கும் நிறைந்திட, அவற்றால் மிக்க செல்வங்களை யுடையனவாகி, முகில் தவழும் அளவும் உயர்ந்த அளவற்ற மாளிகைகள் விளங்க, பக்க இடங்களில் நெருங்கி மேலும் குடிகள் தழைக்கும்படியாகக் குடிகளின் நெருக்கத்தைக் கொண்டது அந்த ஆதனூர்.

1046. அந்த ஆதனூரின் வெளியே உள்ள மருத நிலத்தைச் சேர்ந்த வயல்களின் பக்கத்தில் உள்ள வெளி நிலத்தில் புலைச்சேரி ஒன்று இருந்தது. சுற்றம் தழுவுதலை விரும்பிய உரிமையுடைய தொழிலாளரான உழவமர்க்களின் கூட்டம் நிரம்பி, பற்றிய சுரைக் கொடி மேலே படர்ந்த பழைய கூரையை உடைய புல்லால் வேயப்பட்ட சிறிய இல்லங்கள் பல நிலைகளாக நெருங்கி விளங்கப் பெற்றது,

1047. அந்தச் சேரியில் உள்ள வீடுகளில் கூர்மையான நகங்களையும் மென்மையான அடிகளையும் கொண்ட பெட்டைக் கோழியின் சிறிய குஞ்சுகள் தாயுடன் சுற்றிக் கொண்டிருக்கும். முற்றங்களில் நாய்க்குட்டிகள் விளையாடும். அவற்றைக் கரிய இரும்புக் காப்புகளை நெருக்கமாக அணிந்த கரிய சிறுவர் கவர்ந்து ஓடுவர், அதனால் அக்குட்டிகளின் மென்மையான நிறைந்த குரைப்பு ஓசையை அந்தச் சிறுவர் இடையில் கட்டிய இரும்பு மணியின் சதங்கைகள் அடக்கி விடும். (சரி-காப்பு)

1048. அந்தப் புலைப்பாடியில் மருத மர நிழலில் உழத்தியர் தம் குழந்தைகளை உறங்கச் செய்வர். வஞ்சி மர நிழலில் புதைக்கப்பட்ட பெரிய பானைகளில் பெட்டைக் கோழிகள் தம் முட்டைகளை அடைகாத்துக் கொண்டு ஒடுங்கிக் கிடக்கும். மாமரங்களில் வார்களால் இழுத்துக் கட்டப்பட்ட பறை மேளங்கள் தொங்கவிடப்பட்டிருக்கும். தென்னை மரங்களின் அடியில் உள்ள பொந்துகளில் நாய்க் குட்டிகள் தங்கும்.

1049. மிக்க வன்மையுடைய திண்மையான பள்ளர்கள் உழவுத் தொழிலுக்கான செயல்களைச் செய்ய வேண்டிய கால்மான விடியற்காலத்தை அளந்து காட்டி அவர்களைத் தொழிலில் புகுத்த அழைக்கின்ற, சிவந்த உச்சிக் கொண்டையை உடைய கோழிகள் தங்குவதற்கு இடமானது மணம் கமழும் குளிர்ந்த கிளைகளையுடைய காஞ்சி மரநிழல். அதன் பக்கங்களில் எல்லாம் சுருண்ட கூந்தலையுடைய புலை மகளிர் நெல்லைக் குற்றுவர். அப்பாட்டின் ஒலி எங்கும் ஒலிக்கும்.

1050. அப்புலைப் பாடியில் உள்ள பொய்கையின் பக்கங்களில் எல்லாம் பறவைகளும் குளிர்ந்த நீரில் ஒலிக்கும். தள்ளாடிச் செல்லும் காலின் நடை அசைதலால் தளை அவிழ்ந்து மலர்ந்த குவளை மலர்கள் தேனைச் சிந்துவதற்கு இடமான பசிய கூந்தலில் புலைச்சியர் நெற் கதிர்களைச் சூடிக் கொண்டு கள்ளினை உண்டு ஆடுவர். அவர்களின் ஆட்டத்திற்கு ஏற்பப் பறைகளும் ஒலிக்கும்.

1051. இத்தகைய இயல்புடையதாய் விளங்கும் புலைப் பாடியில், தம் உண்மை அன்பைச் சிவபெருமானின் திருவடிக்கே விளைவித்தலால் உண்டான முன் உணர்ச்சியோடு இவ்வுலகத்தில் நந்தனார் என்ற பெயரையுடைய ஒருவர் இருந்தார். அவர் அவ்வூரின் வெட்டிமைத் தொழிலைத் தர்பமாக உடையவர். அவர் தமக்கு ஒப்பில்லாதவராகச் சிறந்து விளங்கினார்.

1052. அவர் இந்த உலகத்தில் வந்து தோன்றி உணர்வு தெரியத் தொடங்கிய பின்பு, அந்த நாள் முதலாய், பிறை மதியான கண்ணி மாலை சூடிய பெருந்தகையாம் சிவ பெருமானிடத்தில் சிறப்புடைய பெரிய விருப்பால் பேரன்பு கொண்ட உள்ளத்தை உடையவராய் விளங்கினார். மற்றும் வேறு தெய்வங்களிடத்தும் தீய தொழில்களிலும் மனத்தைச் செலுத்தாது, தம் குலத்துக்குரிய சிவ தருமங்களைச் செய்து கொண்டு, சிவனடிக் கீழ் அடிமை செய்து வாழ்ந்து வந்தார்.

1053. ஊரில் விடப்பட்ட வெட்டிமைத் தொழிலுக்கான மானிய நிலத்தின் வருவாயைத் தம் உணவுக்கு ஆதாரமாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். தம் பிறப்பினால் வரும் தொழிலைச் செய்து வந்த அவர் இறைவனின் திருத் தொண்டில் தலை நின்றார். கூர்மையான மூன்று தலைகளையுடைய சூலத்தை ஏந்திய சிவபெருமானின் கோயில் தோறும் பேரிகை முதலான முகக்கருவிகளுக்கும்,

1054. போர்வைத் தோலும், கட்டப்படும் வாரும் தந்து வந்தார். மற்றும் இவ்வாறான மற்றச் சாதனங்களும், இசைக்கின்ற நேர்மையுடைய வீணைக்கும் யாழுக்கும் அவற்றுக்கு ஏற்ற வகையில் பொருத்தமான நரம்பும் தந்து வந்தார். அன்புடனே தேவர் பெருமானான சிவபெருமானின் அர்ச்சனைக்கு வேண்டிய கோரோசனை முதலான பொருள்களும் அவர் தந்து வந்தார்.

1055. இங்ஙனம் தம் தொழிலில் முடிந்த அளவு எல்லா வற்றையும் எங்கும் நந்தனார் செய்தார். திருக் கோயிலின் திருவாயிலின் வெளியே நின்று, உண்மை பொருந்திய பேரன்பின் மிகுதியால் ஆடுவதும் பாடுவதுமாய் இருந்து வந்தார். அக்காலத்தில்,

1056. திருப்புன்கூர் என்ற தலத்தில் எழுந்தருளி யிருக்கும் சிவலோகநாதரின் செம்மையான திருவடிகளை மிகவும் எண்ணி விருப்பத்துடனே, தாம் வேண்டிய திருப் பணிகளைச் செய்வதற்கு உண்டான ஆசையால் உள்ளம் ஒருமைப்பட்டவராய், தம் ஆதனூரினின்றும் புறப்பட்டு, வருத்தமுறும் காதலால், அந்தத் திருப்புன்கூர் தலத்தின் பக்கத்தை வந்து அடைந்தார்.

1057. சிறப்புடைய இசையைப் பாடி நந்தனார் திருப்புன்கூர் வாயிலில் நின்றுகொண்டு இறைவனை நேரே கண்டு வணங்க வேண்டும் என்று நினைத்தார். அவ்வாறு நினைந்த அவர்க்கு, அவ்வாறே இறைவன் அருள் செய்பவ ராய், மேகங்கள் தவழ்ந்து செல்லும் மதில் சூழ்ந்த திருப்புன் கூரில் வீற்றிருக்கும் சிவலோகநாதர், தம் திருமுன்பு இருக்கும் போர் வல்ல ஏற்றை விலகி இருக்கும்படி ஆணையிட்டுத்; தம்மை நந்தனார்க்கு நேரான காட்சி புலப்படும்படி செய்தருளினார்.

1058. சிவலோக நாதரின் கோயில்கள் திருவாயில் முன்னம் நின்று, இவ்வுலகத்தில் பிறவியைக் கடக்கும் சிவ நெறியில் நின்ற நந்தனார், இறைவனை வழிபடுகின்ற பணியை முடித்துக்கொண்டு பணிந்து எழுந்து செல்ல லானார். அவ்வாறு செல்பவர் அந்தக் கோயிலை அடுத்துள்ள பின்பக்கம் ஓர் இடம் பள்ளமாய் இருத்தலைப் பார்த்து அதனைக் குளமாகத் தோண்டினார்.

1059. மாலை போல் மலர்கின்ற பொன் நிறம் கொண்ட கொன்றை மலரைச் சூடிய திருமுடியைக் கொண்ட சிவபெருமானின் திருவருளால், இடம் அகன்ற குளத்துக்கு ஏற்றவாறு தோண்டினார். பின்னர்த் தம் இறைவர் எழுந்தருளி யிருக்கும் கோயிலை வெளியே வலமாகச் சூழ்ந்து வந்து பணிந்து எழுந்து கூத்தாடி, அவரிடம் விடை பெற்றுக் கொண்டு, தம் ஊரைப் போய் அடைந்தார்.

1060. சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருக்கும் பதிகள் பலவற்றுக்கும் போய் இவ்வாறு வணங்கி உண்மையான திருத்தொண்டைச் செய்து வாழ்ந்து வந்தார் நந்தனார். அவர் அன்பானது மேல் மேல் எழுந்த உள்ளத்துடன் திருத் தில்லையில் உள்ள திருவம்பலத்தைக் கண்டு வணங்குவ தற்கு உண்டான பெருங் காதல் உணர்வானது நீங்காது வந்து தோன்ற,

1061. அன்றைய இரவு கண் உறங்காதவர் ஆனார். விடிந்த பின், "அந்தத் தில்லையில் சேரும் தன்மை என் குலத்துக்குப் பொருந்துவதில்லை" என்று எண்ணினார். "எனக்குத் தோன்றிய இந்த எண்ணமும் எம்பிரானது ஏவலே!" எனவும் அவர் எண்ணினார். அங்குச் செல்லும் முயற்சியை ஒழித்திடுவார்; அதன்பின் மேன்மேலும் எழும் ஆசை அதிகரிக்க "நாளைப் போவேன்!" என்று கூறினார்.

1062. இங்ஙனம் அவர் 'நாளைப் போவேன்!' என்று சொல்லிப் பல நாட்களும் கழிந்தன. பின் அவர் மனம் பொறாமல், பூளைப் பூப்போன்ற பிறவியான கட்டு நீங்கப் போவதற்குத் துணிவு கொண்டவராய், பாளைகளில் பூக்கள் நிறைந்துள்ள பாக்கு மரங்கள் சூழ்ந்த அந்தப் பழமையான ஊரினின்று புறப்பட்டுச் சென்று, ஆண் வாளை மீன்கள் எழுந்து பாய்வதற்கு இடமான வயல்கள் சூழ்ந்த தில்லையின் பக்கத்தை அடைபவர் ஆனார்.

1063. அங்ஙனம் நந்தனார் செல்லும்போது, அந்தத் தில்லையின் எல்லையினை வணங்கினார். எழுந்து பெருகும் சிவந்த தீயை வளர்க்கும் வேள்விகளில் எழும் புகையையும், பெரிய அந்தணச் சிறுவர் மறைகளை ஓதுகின்ற மடங்கள் இருப்பதனையும் கண்டார்; அவற்றைக் கண்டதும் தம் இழிவான தம் குலத்தை எண்ணி அஞ்சி மேலே செல்லாதவாறு நின்றார்.

1064. அங்ஙனம் நின்ற நந்தனார், அத்தில்லையில் தாம் சென்று சேர்வதற்கு அரிய பெருமையை எண்ணினார். "இதற்கு மேல் முன் சென்று இவற்றையும் கடந்து ஊரைச் சுற்றிச் சூழ்ந்த மதிலின் வாயிலில் புகுந்தால் அங்கு மலை போன்ற மாடங்கள் தோறும் பொருந்திய வேதிகைகளுடன் பொருந்திய மூவாயிரம் ஆகுதிகள் இருக்கின்றன" எனக் கூறுவார்."

1065. "இங்ஙனம் இருத்தலால் நான் அங்குச் சென்று சேர்தல் எனக்கு அரியதாகும்" என்று அஞ்சி, அந்தத் தலத்தின் மதிலின் வெளிப் பக்கத்தில் அடங்காத பெருங் காதல் ஒப்பில்லாததாய் மேல்மேல் வளர்ந்து பெருக, உள்ளம் உருகிக் கைகளால் தொழுது, கூறுவதற்கரிய அந்த நகரத்தை எல்லையிலே வலமாக வரலானார்.

1066. இங்ஙனம் இரவும் பகலும் அத்தில்லையை வலமாக வந்து, அந்நகரத்தினுள் சென்று சேர்வதற்கரிய அத் தன்மையை எண்ணி மனம் வருந்திய தொண்டர் நந்தனார் அயர்ந்து, "மைபோல் கரிய திருமிடற்றையுடைய இறை வரின் திருவம்பலத்தின் நடனத்தைக் கண்டு வணங்குவது எப்படி?" என எண்ணி வருத்தத்துடன் உறங்கலானார்.

1067. "துன்பத்தைத் தரும் இந்தப் பிறவியானது தடையாய் உள்ளது!" என்று மனத்தில் எண்ணி நந்தனார் உறங்கினார். அந்த நிலைமையினை அம்பலத்துள் ஆடும் அம்பலவாணர் அறிந்தருளினார். நிலைபெற்ற அந்தத் தொண்டரின் வருத்தம் எல்லாவற்றையும் போக்குவதற்காக அவர்க்கு முன்பு கனவில் புன்சிரிப்புடன் அருள் செய்ய லானார்.

1068. "இந்தப் பழி போய் நீங்குவதற்காகத் தீயிடத்து நீ முழுகிப் பூணூல் அணிந்த மார்பையுடைய அந்தணர்களுடன் எம் முன் வருவாயாக!" எனக் கூறிய மெய்ப் பொருளான இறைவர், அவ்வாறே, தில்லையில் வாழும் அந்தணர்க்கும் கனவிலே தோன்றி நந்தனார் மூழ்குவதற்குத் தீ அமைத்துக் கொடுக்கும்படி அருள் செய்து, பின் தம் சிற்றம்பலத்தை அடைந்தார்.

1069. நம் இறைவனின் கட்டளையைக் கேட்ட தவ மறையவரான தில்லை வாழ் அந்தணர் யாவரும், அம்பலவாணரின் கோயில் திருவாயில் முன்னம் அச்சத்துடன் வந்து கூடி, "நம் இறைவர் அருளிய பணியை நாம் செய்வோம்!" என்று ஏத்திச் சென்று, தம் அன்பு பெருக வருகின்ற திருநாளைப் போவாரிடம் வந்தனர்.

1070. "தலைவரே! கூத்தப் பெருமான் கொடிய தீயை உமக்கு அமைத்துத் தருமாறு அருள் செய்ததால், இப்போது உம்மிடம் வந்தோம்" என்று உரைத்தனர். வருந்தும் மனத்தையுடைய திருத்தொண்டரான நந்தனார் "நான் உய்ந்தேன்!" என்று வணங்கினார். அவரது இசைவைப் பெற்ற தெய்வ மறை முனிவர்களும் அவ்வாறே தீ அமைத்து, அமைத்த அச்செய்தியைத் திரும்ப வந்து அவர்க்குத் தெரிவித்தனர்.

— 1071. மறையவர் அங்ஙனம் அறிவித்த பின்பு தென் திசை மதில் புறத்தில் உள்ள சந்திரனைத் தொடுமாறு உயர்ந்த திருவாயிலின் முன் சிவபெருமானின் நிறைந்த பேரருளால், மறையவர் தீயை வளர்த்த தீக்குழியினை அடைந்து, இறைவரின் திருவடிகளை மனத்தில் கொண்டு நந்தனார் அந்தத் தீயினைச் சுற்றி வலமாக வந்தார்.

1072. நந்தனார் கைகளைக் கூப்பித் தொழுது, ஐந்து தொழில் திருக்கூத்து இயற்றுகின்ற திருவடியை எண்ணித் தீயுள் புகுந்தார். அப்போது தீயில் இந்த மாயா காரியமாகிய பொய் பொருந்திய வடிவை ஒழித்துப் புண்ணிய வடிவம் உடைய முனிவர் கோலம் பூண்டு, மார்பில் பூணூல் விளங்க, சடைமுடியும் கொண்டு அவர் அத்தீயினின்றும் வெளிப் பட்டார்.

1073. அங்ஙனம் அவர் செந்தீயின் மீது வந்து எழுந்த போது, செந்தாமரை மலர்மீது வந்து எழுந்த அந்தணனான நான்முகன்போல் தோன்றினார். அப்போது உயர்ந்த வானத்தில் துந்துபி முரசின் முழக்கமானது ஒலித்தது. தேவர்கள் மகிழ்ந்து ஆரவாரம் செய்து புதிய இதழ்கள் கொண்ட மந்தாரப் புது மலர் மழை பெய்தனர்.

1074. இறைவன் அருளான திருவுடைய தில்லைவாழ் அந்தணர்கள் கைகூப்பி வணங்கினர். போற்றுவதற்கு அரிய சிறப்புடைய திருத்தொண்டர்கள் பணிந்து மனம் மிகவும் களிப்படைந்தனர். அரிய வேதங்கள் சூழ்ந்து துதிக்கும் அம்பலத்தில் அருட் பெருங் கூத்து ஆடும் திருவடியை வணங்குவதற்காகத் திருநாளைப் போவாரான மறைமுனிவர் செல்லலானார்.

1075. தில்லை வாழ் அந்தணர்களும் உடன் வரப் போய்த் திருநகரத்தின் உள்ளே புகுந்து, கொல்லை வாழும் இயல்புடைய மானைக் கொண்ட கையையுடைய சிவபெருமானின் திருக்கோபுரத்தைத் தொழுது வணங்கி விரைவாய்ப் போய் உள்ளே புகுந்தார். உலகெல்லாம் உய்வதற்காக அருட் கூத்து ஆடுகின்ற எல்லையைக் கூடினார். அதன் பின்பு அவரை எவரும் பார்க்கவில்லை.

1076. அங்கு நிகழ்ந்ததைக் கண்டு அந்தணர்கள் வியப்புக் கொண்டனர். அரிய முனிவர் துதித்தனர். தம்மை வந்தடைந்த திருத் தொண்டரை வினை மாசு அறுத்து அழகான தாமரை போன்ற அடிகளை வணங்கித் தொழுத வண்ணம் இருக்குமாறு, எல்லை இல்லாத ஆனந்தக் கூத்த ரான அம்பலவாணர் அருள் செய்தார்.

1077. குற்றம் பொருந்திய உடலை விடுவதற்காகத் தீயிலே குளித்து மேல் எழுந்து குற்றம் இல்லாத முனிவராகி, அம்பலவாணரின் திருவடியை அடைந்திட்ட நந்தனாரின் தேசுடைய திருவடிகளை வாழ்த்தி, அதன் மேல் 'திருக் குறிப்புத் தொண்டர்' என்ற வினைப் பாசம் போக்க முயன்றவரின் திருப்பணியின் தன்மையினை இனிக் கூறுவோம்.

திருநாளைப் போவார் புராணம் முற்றிற்று.

## பெருங்கதை

சமண சமயக் கோட்பாடுகளைப் பரப்புவதற்காக இப்பெருங்கதை என்னும் காப்பியம் எழுதப் பெற்றுள்ளது. இந்நூலை எழுதியவர் கொங்குவேளிர் என்ற சிற்றரசர் ஆவர் என அறிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள். உதயணன் கதையைக் கூறும் இந்நூல் ஆசிரியப்பாவால் ஆனது. சமண சமயத்தைச் சார்ந்தது. இதன் காலம் கி.பி.6 அல்லது 7 ஆம் நூற்றாண்டு என்பர். பெருங்கதை 16,230 பாடல்களையும் உஞ்சைக் காண்டம், இலாவன காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம் என ஐந்து காண்டங்களை உடையது. இந்நூல் கொங்கு வேளிர் மாக்கதை எனவும் அழைக்கப்படுகிறது. குணாட்டியர் வடமொழியில் எழுதிய பிருகத்கதா என்ற நூலின் மொழி பெயர்ப்பு இந்நூல். பிருகத் என்றால் பெரிய, கதா என்றால் கதை எனவே பெருங்கதை எனப்பட்டது.

சிலப்பதிகாரம், மணிமேகலைக்கு அடுத்த நிலையில் வைத்து போற்றப்படுவது பெருங்கதை. இம்மூன்று காப்பியங்களையும் தமிழின் முதல் மூன்று காப்பியங்கள் என்று கூறுவர்.

பெருங்கதை முதலும் முடிவுமின்றி இடைப்பட்ட பகுதிகள் மட்டுமே கிடைத்திருக்கிறது. இக்காப்பியம் ஊழின் வலிமை, நாட்டின் சிறப்பு, ஆட்சி சிறப்பு, சமண சமயக் கொள்கைகள், ஒற்றாடல், திருமணம் போன்ற வாழ்வியல் நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டியுள்ளது. மேலும் அக்கால மக்களின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் விளக்குகிறது. கவித்துவத்தை விரும்புவோருக்கு பெருங்கதை சிறந்த விருந்தாக அமையும்.

## கரடு பெயர்த்தது

. . . . . . . . பொருள்புரி நூலும்
அவ்வகை சான்ற வுலக புராணமும்
பரவகை மரபிற் பாசண் டியர்கள்
சலசல மிழற்றுஞ் சமய விகற்பமும்
இசையொடு சிவணிய யாழி னூலும்
நாடகப் பொருளும் . . . . . . .
உப்பாற் பொருளு முட்கொண் டடக்கி
உளப்பா டுடைமை யுதயண னுரைத்தலும்
இணைத்தோ ரிளமையொ டெனைப்பல கேள்வியும்
தவத்தது பெருமையிற் றங்கின விவற்கென
மருட்கை யுற்றதன் மனம்புரிந் தருளி
எம்முடை யளவையிற் பண்புறப் பேணி
நுன்பதிப் பெயர்க்கு மளவையி னும்பியர்
நின்வழிப் படுகென மன்னவ னுரையாக்
குலங்கெழு குமாரைக் குற்றே லருளிக்
கலந்தவ ணின்ற கட்டுரைக் காலத்துத்
தென்கட லிட்டதோர் திருமணி வான்கழி
வடகட னுகத்துளை வந்துபட் டாஅங்கு
நனிசே ணிட்ட நாட்டின ராயினும்
பொறைபடு கருமம் பொய்யா தாகலிற்
சிறைபடு விதியிற் சென்றவட் குறுகி
மதியமு ஞாயிறுங் கதிதிரிந் தோடிக்
கடனிற விசும்பி னுடனின் றாங்குப்
பைந்தொடிச் சுற்றமொடு தந்தை தலைத்தாள்
ஆயத் திடையோள் பாசிழைப் பாவை
யானை மிசையோன் மாமுடிக் குருசில்
இருவரு மல்வழிப் பருகுவனர் நிகழ
யாதனிற் சிதைந்திவ் வடற்பெருங் களிறென
வேழ வேட்டமம் விதியின் வினாய
கதிர்முடி வேந்தன் கண்ணிய நுண்பொருட்
கெதிர்மொழி கொடீஇய வெடுத்த சென்னியன்
மன்னவன் முகத்தே மாதரு நோக்கி
உள்ளமு நிறையுந் தள்ளிடக் கலங்கி
வண்டுபடு கடாஅத்த வலிமுறை யொப்பன

பண்டொடு பாடு பறையினுங் கலைவலர்
வரி நெருக்குந் தெருவினுள் வட்ட செம்மையிற்
டெக்குமலை நிலமது வோட்டி நிமிர்ந்து
மதக்களி றிவண்டு டன் மண்டி மாறும்
சில்வழி வழிக்கும் பெருமை பிடுத்
தொல்வழி வாய்த்தத் தொட்டலினைத் தொடா
வழுவில் போகமொடு வாய்மையின்று நுகரும்
உழுவ லன்பி னுள்ளாந் தூங்கி
இறையினுங் கொடியினு மிடையினு மிணைங்கித்
தேனினும் பாலினுந் தீஞ்சுவைத் தாகிக்
குலத்தினுங் குணத்தினுங் கூடிய வன்பினும்
இனத்தினும் பிறவினு மிவ்வகை யிணைந்த
அமைப்பருங் காதலு மிணைப்புறு வடக்கி
ஒருவயிற் போல வுள்வழி நோக்கமொ
டிருவயி னொத்தகை திறந்த பின்னர்த்
தானணி வேந்தன் றலைத்தா ணிகழ்ந்தது
காரண மாகக் காத றேறி
ஓர்ப்புறு நெஞ்சந் தேர்ச்சியிற் றிருத்திப்
போர்க்குவன் விளைவிய பெருங்களிற் றிலக்கணம்
போர்த்தொழில் வேந்தன்முன் பொருந்தக் காட்டி
நீல யானை நெஞ்சுபுக் கனன்போற்
சீல விகற்பந் தெரிந்தன னுரைக்கலும்
அதுமுன் னடக்கிய மதியறி பாகரொ
டங்கை விதிர்த்தாங் கரசவை புகழப்
பைந்தொடிச் சுற்றமொடு பரிசனம் போக்கி
விழுநிதி யடுத்த கொழுமென் செல்வத்துக்
கணக்கரை வியன்கர்க் கலவறை காக்கும்
திணைத்தொழி லாளரைப் புகுத்துமி னீங்கெனப்
புறங்காற் றாழ்ந்து போர்வை முற்றி
நிலந்தொய் புடுத்த நெடுநுண் ணாடையர்
தானை மடக்கா மான மாந்தர்
அண்ணாந் தியலா வான்றுபுரி யடக்கத்துக்
கண்ணி நெற்றியர் கைதொழுஉப் புகுதரக்
களிறுவழங்கு தடக்கையிற் காண்வரக் கொண்ட
வெள்ளேட் டங்கண் வித்தக மெழுதிய

கடைபெழுத் தொலைக் கணக்குவரி காட்டி
முன்னுறு கிளவியிற் பண்ணுறப் பணிக்கலும்
பன்மணி விளக்கும் பள்ளிக் கட்டிலும்
பொன்னி னடைப்பையும் பூரண கலசமும்
கவரியுங் கடகமுங் கதிர்முத் தாரமும்
நிகரின் மாக்ணல நிதியொடு நிறைந்த
ஆரியச் செப்பும் யவனமஞ் சிகையும்
பொன்செய் பேழையொடு பொறித்தாழ் நீக்கி
நன்கனம் படுத்து நகுமலர் பரப்பி
விரைவிரி யாளர் புரைவுறப் புணர்த்த
பண்டம் புதைத்த வண்டுபடு வளநகர்
மடையரு மகளிரு மல்லரு மமைச்சரும்
கடையருங் கணக்கருங் காப்பரு முளப்பட
இறைவினை திரியாப் பழவினை யாளரை
வழிமுறை மரபிற்றந் தொழின்முறை நிறீஇ
வாய்மொழி விதியின் மேவன வெல்லாம்
நோக்கி மன்ன நுவலருங் காப்பின்
அணிந்தது நகரெனப் பணிந்தவ ருரைக்கலும்
குஞ்சரச் சேரிக் குமரற் கியற்றிய
வெண்சுதை நல்லி லுறைய ளாக
இடம்புகு தக்கன் றிருத்த னெடிதெனப்
பேரியல் வையம் பின்செல வருளி
வீரிய வேந்தன் விடுத்தகம் புக்கபின்
விட்டுழல் யானை யச்ச நீக்கி
வெறிகோள் பண்ணியுந் தொழிறலைப் பெயர்த்தவன்
கலிகொ ளாவணங் கைதொழப் போகி
அரைமதி யிரும்பொடு கவைமுட் கரீஇ
பீலி சுற்றிய வேணு வெண்காழ்
யானை யிளையரைத் தானத்துப் பிணிக்கெனத்
தகைமலி வேழந் தலைக்கடை யிழிதந்
தகம்புக் கனனா லரசவை விடுத்தென்.

■ ■ ■